ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி. லென்ஸ். என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு
# ஈழமுரசு®
முரசு 03 | 12 - 26 டிசம்பர் 2017 | முழக்கம் 062

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ் .கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொமில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com



## காணாமல் ஆக்கப்பட்டோர் 300 நாட்களை எட்டும் போராட்டம்

## தமிழர்களைப் பீடிக்கும் மறதி நோயும், புனிதராகும் சங்கரியும்

## கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் கொழும்பின் உறுதியின் பின்னுள்ள மர்மம்

## அரசியல் அநாதைகளாகும் தமிழ் இனம்

## பிரான்சின் 'தேசத்தின் பாடகர்' - ஓய்ந்தது ஓர் இசைக்குரல்

## இந்தியாவின் சுயரூபத்தைப் புரிந்து கொண்ட குர்தி தலைவர்

## அதிகரிக்கும் வான்கோழிகள்!

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

ஆருஜா உணவகம்
Spécialités Cuisines Indiennes & Srilankaises
Tél : 01 46 06 59 30
06 78 81 81 37
14 Rue Labat 75018 Paris
M : MARCADET POISSONNIERS
: Taxis Bar
7J/7

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE மொழிபெயர்ப்பு நிலையம்
தொடர்பு கொள்ள (Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04





# ASCES

## 27 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** E-mail : asces@free.fr

Le Blanc Mesnil இல் எமது புதிய 5வது கிளை
10, Avenue du Capitaine Fonck, 93150 Le Blanc Mesnil (Le Bourget விமான நிலையத்திற்கு அருகில்)

**Grande Section, CP, CE,CM, Collège, Lycée** வகுப்புகள்
**Maths, Français, Physique, Chimie, SVT, Histoire**

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

06-01-2018 சனி ஞாயிறு மாலை 5.30 மணி
21-11--2017 செவ்வாய் வியாழன் மாலை 4 மணி 6 மணி
17-12-2017 ஞாயிறு காலை 10 மணி (1 நாள்வகுப்பு)
13-11-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
12-11-2017 ஞாயிறு காலை 10 மணி (**Nationality** வகுப்பு)
12-12-2017 செவ்வாய் வெள்ளி பி.ப 2 மணி (Bobigny)
23-11-2017 வியாழன் காலை 9..30 □ 12.30 மணி

**LA COURNEUVE** இல்
**35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve**

**BOBIGNY**
**38, rue Gaston Crépin 93000 Bobigny**

**PARIS**
**3, place de Joinville 75019 Paris M° Crimée**

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
**BAC , BREVET** பரீட்சைகளில் 100வீத சித்தி
**Cambridge University** ஆல் நடாத்தப்படும்
**Starters, Movers, Flyers, Ket, Pet** பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

# ஈழமுரசு

mediacentre

முரசு 03 12 – 26 டிசம்பர் 2017 முழக்கம் 062


"எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன்."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# காணாமல் ஆக்கப்பட்டோர் 300 நாட்களை எட்டும் போராட்டம்

(12.12.2017, செவ்வாய்க்கிழமை)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் நடத்திவரும் தொடர் போராட்டம் 300 நாட்களை எட்டவுள்ளது. கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இத் தொடர் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 296 நாட்களை எட்டியுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை 300வது நாளை எட்டவுள்ளது குறிப்பிடத் தக்கது. இதேவேளை, வவுனியாவில் இடம்பெற்றுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 292வது நாளை எட்டியுள்ளதுடன், எதிர்வரும் 20ம் திகதி 300வது நாளை எட்டவுள்ளது.

மைத்திரிபால சிறீசேனவின் ஆட்சியில் மிக நீண்ட காலத்தை போராட்டத்தில் இந்த மக்கள் கழித்துள்ளபோதும், இதுவரை காத்திரமான முடிவெதனையும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. தங்களிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை, அவர்கள் கையளிக்கப்பட்டபோது பாதுகாப்புத் துறையின் பொறுப்பான பதவியில் இருந்து தற்போது சிறீலங்காவின் ஜனாதிபதியாக இருக்கும் மைத்திரிபால சிறீசேனவினால் கூறமுடியவில்லை என்றால் இனி ஆட்சிக்கு வரும் எவராலுமே அதற்கான தீர்வை வழங்கமுடியாது என்பதே உண்மை. இந்த யதார்த்தின் அடிப்படையிலேயே காணாமல்போனவர்களின் உறவினர்கள் ஓய்வின்றி மிக நீண்ட போராட்டத்தை நடத்திவருகின்றன.

இதுவேளை, சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு யாழில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாபெரும் பேரணியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நடாத்தியுள்ளனர். வட மாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், 'சர்வதேசமே எங்கள் பிரச்சினையை கையாள முன்வாருங்கள்' என்ற, கருப்பொருளில் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி, அங்கியிருந்து யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐ.நா சபை இணைப்பு அலுவலகம் வரை சென்று நிறைவடைந்தது.

கைகளில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை ஏந்தியவாறு, கண்ணீருடன் இந்த பேரணியில் பங்கேற்றனர். காணாமல் போனவர்களை கண்டறியும் அலுவலகத்தை அமைத்தால்அந்த அலுவலகத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அமர்த்தப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். தமக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள் அமைதியாக இருக்கும் நிலையில் தாங்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலையிருப்பதாகவும் பேரணியில் கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது பிள்ளைகள் இன்னும் எங்காவது மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என தாம் இன்னும் நம்புவதாகவும் தமது பிள்ளைகளை கண்டுபிடித்து தர வேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, மனித உரிமைகள் தினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவிலும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளனர். வவுனியா தபால் நிலையத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், 290வது நாள் போராட்டத்தின் மதியம் இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் தமது பிள்ளைகளை காணாது தாம் தவித்து வரும் நிலையில் இதுதானா இலங்கையின் மனித உரிமை? என கேள்வி எழுப்பியிருந்தனர். இதேவேளை தமது பிள்ளைகளுக்கான முடிவு கிடைக்கும் வரையில் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் கூளுரைத்துள்ளனர்.

முன்னதாக, கடந்த 8ம் திகதி வலிந்து காணமலாக்கப்பட்டவர்களை

தொடர்ச்சி 04ம் பக்கம்




Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு

“உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை”

“MEDIACENTRE” JOURNAL TAMOUL bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80


# காணாமல் ஆக்கப்பட்டோர்...

உடன் விடுதலை செய்யக்கோரி, யாழ். மத்திய பேருந்து நிலையம் நிலையம் முன்பாக, கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. முன்னிலை சோசலிசக் கட்சியின் ஏற்பாட்டில், இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமலாக்கப்பட்ட வழக்கு, யாழ். நீதிமன்றில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, அவர்கள் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டில், லலித், குகன் உள்ளிட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட அனைவரையும் உடன் விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி, இப்போராட்டம்




முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, காணமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமிட்டனர்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை மிக விரைவாகத் திறந்து, முறையான விசாரணைகளை நடத்துமாறு கோரி, அம்பாறை திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கடந்த வாரம் முன்னெடுத்திருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் அம்பாறை மாவட்ட அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள், ‘சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதி பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும், அரசியல் கைதிகளை உடனடியான விடுதலை செய்ய வேண்டும், நிலைமாறு கால நீதிக்கான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும்’ என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது இவ்வாறிருக்க, உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை புறக்கணிக்கப் போவதாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். கிளிநெச்சியில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவரும் காணாமல்




ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் அந்த அமைப்பைச் சேர்ந்த கனகரஞ்சினி மற்றும் லீலாதேவி ஆகியோரே ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்காக எந்த அரசியல்வாதிகளும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத காரணத்தினால் வருகின்ற உள்ளூராட்சி தேர்தலை புறக்கணிக்கப் போகின்றோம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையே, சிறீலங்காக் கடற்படையினருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் நிலத்தை விடுவிக்கக்கோரி கடந்த மே மாதம் முதல் 215வது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தை இரணைதீவு மக்கள் தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கனடாவின் அழுத்தம்

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்க சிறீலங்கா அரசுக்கு கனேடிய அரசு அழுத்தங்களை வழங்கவேண்டும் என யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கனடாவின் சிறீலங்காவிற்கான தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த கனடாவின் தூதுவர் டேவிட் மைக்கின்னன் யாழ்ப்பாண ஆயரை அவரது இல்லத்தில் கடந்த 29ம் திகதி புதன்கிழமை சந்தித்திருந்தார். இதன்போது இவ்வாறு வலியுறுத்தினார். போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் போர் நிறைவுக்கு வந்த



பின்னரும் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அவர்களைத் தேடி உறவுகள் சொல்லணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு உரிய பதிலை அரசு இன்னும் வழங்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை இழுத்தடிக்காமல் காத்திரமான நடவடிக்கை எடுக்க சிறீலங்கா அரசுக்கு கனடா உரிய அழுத்தத்தை வழங்கவேண்டும் என்று?யாழ்ப்பாண ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கனடாத் தூதுவரிடம் எடுத்தரைத்தார்.

இந்நிலையில் ஆயரின் வேண்டுகோளினை ஏற்ற கனேடிய தூதுவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கனடா அரசு, சிறீலங்காவிற்கு நேரடியாகவும் ஐ.நாவிலும் அழுத்தங்களை வழங்கிவருகிறது. தமிழ் மக்களின் விடயத்தில் கனடா தொடர்ந்தும் கரிசனையாக இருக்கும் என பதிலளித்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை சீனா வசமானது
# 1.12 பில்லியன் டொலருக்கு விற்பனை

ஹம்பாந்தோட்டை துறைமுகம் உத்தியோகபூர்வமாக குத்தகைக்கு விற்கப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை துறைமுகம், ஹம்பாந்தோட்டை துறைமுகக் குழு மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவை (Hambantota International Port Group (HIPG) and Hambantota International Port Services) ஆகிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. சீனாவின் தலைமை நிறுவனம் ஒன்று துறைமுகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டதுடன், சிறீலங்காவிற்கு குத்தகைப் பணத்தின் முதலாவது கொடுப்பனவும் செய்யப்பட்டது. இந்தக் கையளிப்பு சிறீலங்கா நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து இடம்பெற்றுள்ளது. 99 வருட குத்தகை அடிப்படையில் கைமாற்றப்பட்டிருக்கும் துறைமுகத்துக்காக மொத்தம் 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சிறீலங்காவிற்குக் கிடைக்கவுள்ளது.

மொத்த கொடுப்பனவில் இருந்து முதல் 30 வீதமான, 294 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சிறீலங்கா அரசுக்கு வழங்கப்பட்டது. இதனிடையே, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணியாற்றுவோரின் உறவினர்கள் துறைமுக வளாகத்திற்கு எதிரே நின்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். துறைமுகத்தில் பணியாற்றும் தமது உறவினர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்கக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முன்னதாக, அரச தனியார் இணை வேலைத் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, அதனை அபிவிருத்தி செய்வதற்கான இணை ஒப்பந்தம் 2017ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இதனடிப்படையில், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட விசேட பணிகளை மேற்கொள்ளும் இரு நிறுவனங்களும் தமது செயற்பாட்டினை கடந்த 09.12.2017 முதல் ஆரம்பிப்பித்துள்ளது.

இதற்கிடையே, சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் பன்னாட்டுத் திணைக்களத்துக்கான உதவி அமைச்சர் வாங் யாஜன், இன்று 12ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 15ம் திகதி வரை இலங்கையில் நின்றிருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது.

# சிறீலங்காவிற்கு வக்காலத்து...

உறுப்பினராகப் பதவி வகிப்பவர் இயன் பெய்ஸ்லி. இக்கட்சியானது அயர்லாந்து குடியரசுடன் வட அயர்லாந்து இணைவதற்கு எதிராகவும், பிரித்தானியாவின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாநிலமாக வட அயர்லாந்து இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்ட கடும்போக்குவாதக் கட்சியாகும்.

இக் கட்சியில் 2010ம் ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் இயன் பெய்ஸ்லி, சிறீலங்காவிற்கும், பிரித்தானியாவிற்கும் இடையில் பின்கதவு வணிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பகீரத பிரயத்தனங்களில் ஈடுபடுவதாக அண்மையில் பிரித்தானியாவின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்நிலையில் மகிந்த ராஜபக்சவின் அடிதடி ஆலோசகர் என்று பெயர் போன சஜின் வாஸ் அவர்கள் முழுச் செலவையும் பொறுப்பேற்க, ஒரு இலட்சம் பவுண்கள் பெறுமதியான உல்லாச விடுமுறைகளில் 2013ம் ஆண்டு தனது குடும்பத்துடன் இயன் பெய்ஸ்லி சென்று வந்துள்ளமை பிரித்தானியாவின் முன்னணி நாளேடான த ரெலிகிராப் பத்திரிகையின் விசாரணைகளில் ஆதாரபூர்வமாக அம்பலமாகியிருக்கின்றது.

கடந்த மாதம் பிரித்தானியா நாடாளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு சிறீலங்கா தூதுவர் அமாரி விஜேவர்த்தன அவர்களை அழைத்து பேச்சுவார்த்தைகளில் இயன் பெய்ஸ்லி ஈடுபட்டிருந்த நிலையிலேயே இவரது உல்லாச விடுமுறைகள் பற்றிய ஆதாரங்களை த ரெலிகிராப் பத்திரிகை அம்பலப்படுத்தியிருக்கின்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசு®

# மாவீரர்நாள் எழுச்சியும் தேர்தல் காய்ச்சலும்

தமிழீழ தேசத்தின் வரைபடத்தையும், தமிழர்களின் விடுதலைக்கான போராட்டம் ஓயப்போவதில்லை என்பதையும் தாயக மக்கள் மீண்டும் ஒரு தடவை உலகிற்கு தியாகங்களின் தீபங்களால் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளனர். தமிழர் தாயகம் என்று கூறப்படும் தமிழீழ தேசம் எங்கும் மாவீரர்களுக்கான எழுச்சி நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. அந்த நிகழ்வுகளில் மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தங்கள் மண்ணின் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்களுக்கு ஈகைச்சுடர்களை ஏற்றி, கார்த்திகை மலர்களைத் தூவி தங்கள் அஞ்சலியை உணர்வோடு செலுத்தியுள்ளனர்.

கடந்த 29 ஆண்டு கால மாவீரர்நாள் நிகழ்வுகளில் இம்முறை நிகழ்வு பெரிதும் மாறுபட்டது. சிறீலங்காவும் ஏன் இந்த உலகமும் விரும்பாத ஒரு நிகழ்வு இம்முறை மாவீரர்நாள் மூலம் அரங்கேறியுள்ளது. தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரையைப்போல், மௌனத்தால் ஒரு பெரும் செய்தியை இந்த உலகிற்கு தமிழினம் சொல்லியிருக்கின்றது.

2008ம் ஆண்டு வரை மாவீரர்நாள் நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் நடந்தன. மக்கள் விரும்பியோ அல்லது சர்வதேசம் குறிப்பிடுவதுபோல் விடுதலைப் புலிகளின் மீதான அச்சத்தில் விரும்பாமலேயோ அந்த நிகழ்வுகளில் பங்கேற்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததென்றும் வைத்துக்கொள்வோம். 2009ற்குப் பின்னர் மாவீரர்நாளை நடத்துவதற்கு சிங்களப் பேரினவாதம் அனுமதிக்கவில்லை. ஆனால், இம்முறை மாவீரர்நாள் நிகழ்வில் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டிருக்கின்றார்கள். கலந்துகொள்ளுமாறு யாருடைய அச்சுறுத்தலோ அல்லது நிர்ப்பந்தமோ அவர்களுக்கு இருக்கவில்லை. சிறீலங்கா அரசு மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தத் தடை ஏதும் விதிக்கவில்லை என்று கூறிக்கொண்டாலும், மாறாக கலந்துகொண்டால் எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படும் என்ற அச்சுறுத்தல்களே சிறீலங்காப் புலனாய்வுத்துறைகளாலும், இராணுவம் மற்றும் காவல்துறைகளாலும் பெருமளவில் மக்களுக்கு விடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் அத்தனை அச்சுறுத்தல்களையும் மீறி இத்தனை மக்கள் கலந்துகொண்டிருக்கின்றார்கள் என்றால், அவர்கள் இந்த உலகிற்கு சொல்லியிருக்கும் செய்தி, 'தாங்கள் தூங்கவில்லை, தங்கள் விடுதலைக்கான தாயகக் கனவு இன்னமும் அழிந்துவிடவில்லை' என்பதுதான். தங்களுக்கு கிடைத்த சிறிய வாய்ப்பைப் பயன்படுத்தி இத்தனை பாய்ச்சலை மேற்கொள்ளும் மக்கள், தடைகள் எவையும் இல்லையென்றால் எத்தனை வேகமாகப் பாய்வார்கள் என்பதற்கு இந்த மாவீரர்நாள் உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறியிருக்கின்றது.

ஆனால் மக்களின் இந்த எழுச்சியை பெரும் தீயாக மாற்றவேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள் இப்போது தேர்தல் காய்ச்சலில் பீடித்துக் கிடக்கின்றன. குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும் கனவில், ஒற்றை ஆட்சிக்குள், உள்ளூராட்சி சபைக்குள் உரிமைகள் கிடைக்கும் என்று உரையாற்றத் தொடங்கியுள்ளார்கள். மாவீரர்நாள் நிகழ்வில்கூட பங்கேற்ற நேரமில்லாமல் தலைமறைவாகிக் கிடந்தவர்கள், வாக்குப் பிச்சைக்காக மக்களின் வாசல் கதவுகளைத் தட்டத் தொடங்கியுள்ளார்கள்.

கட்சி தாவுவதும், கூட்டணி கூடுவதும் என மக்களின் உரிமைகளை மறந்து ஆசனக் கனவில் அலையத் தொடங்கியுள்ளார்கள். 'நாட்டுப்பற்றிருந்தால் எங்களுடைய புதிய கூட்டணியில் வந்து இணையுங்கள்' என்று தமிழ் கட்சிகளின் தலைமைகள் அழைப்பு விடுக்கின்றார்கள். எந்த நாட்டுப்பற்று என்பதைக்கூடத் தெரியாமல் அவருடன் கூட்டுச்சேரவும் பலர் தயாராக இருக்கின்றார்கள். உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில்கூட தமிழர்கள் யார், யாருடன் கூட்டணி அமைக்கவேண்டும் என்பதை சிங்கள ஆட்சியாளர்களும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளும்தான் தீர்மானிக்கின்றன. வேட்பு மனுத் தாக்கல் செய்து, பிரச்சாரம் தொடங்கி மக்களின் நிலையை நாடிபிடித்து பார்க்கும் முன்பே தாங்கள்தான் வெற்றிபெறுவோம் என்றும் சில தமிழ் தலைமைகள் உறுதியளிக்கின்றன. இவை எவ்வாறு சாத்தியம்?

அமெரிக்க புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் கூறியதுதான் நினைவிற்கு வருகின்றது...

'இப்போது நாடுகளில் ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்த அனுமதிக்கப்படுகின்றது. ஜனநாயக முறைப்படி யாரும் போட்டியிடவும் அனுமதிக்கப்படுவார்கள். ஜனநாயக முறைப்படி மக்கள் தாங்கள் தாங்கள் விரும்பியவ வேட்பாளருக்கு வாக்களிக்கவும் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், யார் வெற்றிபெற வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கமுடியாது. அதனைத் தீர்மானிக்கும் சக்தி எங்களைப் போன்ற வல்லரசு நாடுகளுக்குத்தான் இருக்கின்றது' என்பதுதான் அது.

ஆனால், இந்த சக்திகளையும் தாண்டி இன்னொரு சக்தி இருக்கின்றது. அது மக்கள் சக்தி. உலகின் தலைமைகள் பலவற்றை மாற்றியது மக்கள் சக்திதான் என்பது வரலாறு. அதனைத்தான் கட்டியம்கூறி நிற்கின்றது தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த மாவீரர்நாள் எழுச்சியும்.

# உறுதியான தமிழர் தலைமை உருவாவதை இந்தியாவும் சிறீலங்காவும் விரும்பவில்லை

## சுரேசின் கட்சி தாவல் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்கம்

தமிழ் மக்களுக்கிடையே நேர்மையான, விட்டுக்கொடுப்பற்ற, கொள்கையிலிருந்து விலகாத தலைமை உருவாவதை சிறீலங்கா அரசும் இந்தியாவும் மேற்குலகமும் விரும்பவில்லை. அதனால் தான் தமிழ் மக்களுக்கு விரோதமான கட்சிகளை பலப்படுத்துவதாக சாடியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ளும் தமது கூட்டணியில் 80 வீதத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் பொது அமைப்புக்களை சார்ந்தோரே எனவும் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர். எல்.எவ் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இடையே உள்ளூராட்சி தேர்தலில் தான் உதயசூரியனின் கீழ் போட்டியிட முடிவு செய்ததாகவும் எம்மிடம் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் தேர்தலுக்காக என்றாலும் சமஷ்டி, வடகிழக்கு இணைப்பு என பேசி வருகின்றனர். ஆனால் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி சமஷ்டியையும், வடகிழக்கு இணைப்பையும் ஏற்கவில்லை. மாறாக 13ம் திருத்த சட்டத்தையே அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விட மோசமான கொள்கையை கொண்டுள்ள தமிழர் விடுதலை கூட்டணியுடன் எவ்வாறு இணைந்து தேர்தலை எதிர்கொள்ளுவது? அதே போன்று இன்னொரு கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதும் தமிழரசு கட்சியின் சர்வாதிகாரத்தையே அங்கும் தோற்றுவிக்கும்.

தமிழர் தரப்பில் நியாயமான, கொள்கை உறுதி



**தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விட மோசமான கொள்கையை கொண்டுள்ள தமிழர் விடுதலை கூட்டணியுடன் எவ்வாறு இணைந்து தேர்தலை எதிர்கொள்ளுவது?**

போட்டியிடுவது பற்றி ஒரு புரிந்துணர்வு கடந்த நவம்பர் மாதமே எட்டப்பட்டிருந்தது. இந்த தேர்தல் வெறுமனே ஒரு அபிவிருத்தியை பிரதானமாக கொண்டிராமல், புதிதாக கொண்டுவரப்படவுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு மக்களிடையே ஆதரவு உள்ளதா? மக்கள் யாருடைய பக்கம் உள்ளார்கள் என்பதை நாடி பிடிக்கும் தேர்தலாகவே இது உள்ளது.

அதன் அடிப்படையிலேயே இந்த தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற இணக்கப்பாட்டை எட்டியிருந்தோம். இதேபோன்று தமிழ் மக்கள் பேரவையின் மத்தியஸ்தத்தில் இரு கட்சிகளுமே இணைந்து தேர்தலை எதிர்கொள்ளுவது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த சந்திப்பு நவம்பர் 12ம் திகதி நடைபெற்றிருந்தது. எனினும் கடந்த 27ம் திகதி முதல் ஈ.பி.ஆர்.எல்.எவ் எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் டில்லி சென்று வந்த பின்னர் உதயசூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலை கூட்டணியோடு சேர்ந்து தான் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என எம்மிடம் கூறினார்.

எனினும் அதற்கு நாம் மறுப்பு தெரிவித்து விட்டோம். பேரவையோடு மற்றும் எங்களோடு எட்டப்பட்ட முடிவுக்கு மாறாக இது அமைந்திருந்தது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறான நிலைப்பாடுகளை மக்களுக்கு தெரியப்படுத்துவதோடு, தமிழர் விடுதலை கூட்டணியின் பிழையான நிலைப்பாடுகளையும் மக்களுக்கு தெரியப்படுத்துவோம் என கூறியிருந்தோம். எனினும் தனது சுயவிருப்பின் அடிப்படையில் உதயசூரியனில் போட்டியிடவில்லை என கூறிய சுரேஷ், கிழக்கு மாகாண உறுப்பினர்களை அழுத்தத்தினால் யுடைய தலைமை உருவாவதை இந்தியாவும், மேற்குலகும், சிறீலங்கா அரசும் விரும்பவில்லை. அதனால் தான் சுரேஷ் பிரேமச்சந்திரனை ஏமாற்றி தமது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு சென்றுள்ளனர்.

எவ்வளவு தூரம் தங்களுடைய நிகழ்ச்சி நிரலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக நகர்த்தி அந்த நிகழ்ச்சி நிரல் அம்பலமாகி தமிழ் மக்கள் அந்த நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக கிளம்பியுள்ள நிலையில், மாற்று அணியும் தங்கள் பிடிக்குள் இருக்கவேண்டும் கொள்கையில் உறுதியாக இருக்கக்கூடிய அரசியலில் நேர்மையாக இருக்கக்கூடிய தமிழ் மக்களுடைய நலனை மட்டும் கவனிக்கின்ற தரப்பிற்கு மாற்று அணியில் பிடி வைத்திருக்கக்கூடாது என்பதற்காகவும் ஆரோக்கியமான நேர்மையான கொள்கையில் இணக்கப்பாடுடைய ஒரு தூய்மையான மாற்று அணி உருவாகுவதைத் தவிர்ப்பதற்காகவுமே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துரதிஸ்டவசமாக சுரேஷ் பிரேமச்சந்திரனை ஏமாற்றி அத்தகைய முயற்சிக்கு அவரை துணைபோக வைத்திருக்கிறார்கள் என்பது எங்களுடைய பார்வையாகும். எனினும் சுரேஷ் மீது எமக்கு மதிப்பு உண்டு என்பதால்தான் அவருடன் சேர்ந்து தேர்தலை எதிர்கொள்ள சம்மதம் தெரிவித்திருந்தோம். எனினும் அவர் எம்மை இறுதியில் ஏமாற்றியுள்ளார்.

மேலும் எமது தமிழ்த்தேசிய பேரவை சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 80 வீதமானோர் பொது அமைப்புக்களை சார்ந்தோரே, எம்மோடு சேர்ந்து செயற்பட விரும்பு-வர்கள் இணைந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் 1.6 மில்லியன் மாற்றுத் திறனாளிகள்

இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் 1.6 மில்லியன் பேர் காணப்படுவதாகவும், இது இலங்கையின் மொத்த சனத் தொகையில் 7.9 வீதம் எனவும் மத்திய வங்கி அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புள்ளி விபர திணைக்களத்தின் அறிக்கையின் படி ஒவ்வொரு 1000 ஆண்களில் 77 ஆண்களும் ஒவ்வொரு 1000 பெண்களில் 96 பெண்களும் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் உள்ள மொத்த மாற்றுத் திறனாளிகளில் 996,936 பேர் பார்வை குறைபாட்டுடனும் 734,213 பேர் கால்கள் ஊனமாகவும் 389,077 பேர் செவி ஊனமாகவும் 343,689 பேர் உளவள பிரச்சினைகள் உள்ளவர்களாகவும் 197,575 சுய பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இலங்கையில் காணப்படும் 1.6 மில்லியன் மாற்றுத்திறனாளிகளில் 43 வீதம் ஆண்களாகவும் 57 வீதம் பெண்களாகவும் காணப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

சிவில் பாதுகாப்பு பிரிவினரால் வன்னிப் பிரதேசத்தில் இயக்கப்படும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கட்டாய இராணுவப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்படுகின்றனர். அவர்கள் தமது பணியிலிருந்து இதன் காரணமாக விலகுகின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் துஷ்பிரயோகம் 78 வயது முதியவருக்கு சிறை

முல்லைத்தீவில் ஆறு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட 78 வயதான ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் ஒரு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு 50000 ரூபா நட்டஈட்டை வழங்குமாறும், அவ்வாறு இல்லையாயின் மேலும் 18 மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டி ஏற்படும் எனவும், நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். 2013ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி குற்றவாளி, சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டதாக முறையிடப்பட்டிருந்தது. இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட அவருக்கு எதிராக இடம்பெற்ற நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 120 முஸ்லிம் குடும்பங்களுக்கு முல்லைத்தீவில் வீடுகள்!

முல்லைத்தீவில் 120 முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த வாரம் முல்லைத்தீவு கிச்சிராபுரத்தில் இடம்பெற்றது. இந்தத் திட்டத்தில் ஓரிரண்டு தமிழ்க் குடும்பங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது. வீட்டுத் திட்டத்துக்கான நிதியை ஐக்கிய அரபு ராச்சியத்தின் தனவந்தர் ஒருவர் வழங்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அவரின் ஏற்பாட்டில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன என அறிய முடிகிறது.

# சிறீலங்காவிற்கு வக்காலத்து வாங்கும் பிரித்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினர் மர்மம் என்ன?

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குடும்பத்துடன் பல இலட்சங்கள் செலவில் சிறீலங்காவிற்குப் உல்லாசப் பயணங்கள் மேற்கொண்டமையும் அதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கிய உதவிகளும் அதற்குப் பிரதியுபகாரமாக அவர் சிறீலங்காவிற்கு வர்த்தக ரீதியாகப் புரிய முனைந்த உதவிகளும் அம்பலமாகியுள்ள நிலையில், தற்போது பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் ஒருவர் சிறீலங்காவை போர்க் குற்றங்களில் இருந்து பாதுகாப்பதுடன் தமிழினப்படுகொலையை மறைக்க கடுமையாக குரல்கொடுத்து வருவது பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

2009ம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின் போது சிறீலங்கா இனப்படுகொலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக் கூறப்படும் போர்க்குற்றச் சாட்டுகளுக்கு எதிராக தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாக பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நேஸ்பி பிரபு தெரிவித்துள்ளது பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. ஏற்கனவே, கடந்த செப்டெம்பர் மாதம் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றிய நேஸ்வி பிரபு, போர்க்குற்ற அழுத்தங்களில் இருந்து சிறீலங்கா விடுவிக்கப்படவேண்டும் என்று கோரியிருந்தார். அத்துடன், ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது போல, இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்படவில்லை என்றும், 7 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் வரையானோரே கொல்லப்பட்டனர் என்றும் அவர்களிலும் கால்வாசிப் பேர் விடுதலைப் புலிகளே என்றும் நேஸ்வி பிரபு கூறியிருந்தார்.

இந்நிலையில், அண்மையில் சர்வதேச சிறீலங்காப் பேரவை உறுப்பினர்கள் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அவரைச் சந்தித்து உரையாடியிருந்தனர். இதில் சிறீலங்காப் பேரவையின் குழுவில் பிரசங்க ஜெயமான்ன, ஜெயராஜ் பலிஹவர்த்தன, வியட்நாமுக்கான முன்னாள் சிறீலங்காத் தூதர் இவான் அமரசிங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2009ம் ஆண்டு இறுதிப்போரின் போது 40 ஆயிரம் பொதுமக்களை இலக்கு வைத்து படையினரால் கொல்லப்பட்டனர் என்ற அடிப்படையிலேயே சிறீலங்காவின் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான பொறி முறை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் படையினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்கவில்லை. அத்துடன் போரின்போது 7000 முதல் 8000 வரையான பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்பது தனது வாதம் என்று கூறிய நேஸ்வி, சிறீலங்காப் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போர்க் குற்றச் சாட்டுகளை மறுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவப் போவதாக அவர்களிடம் உறுதியளித்திருந்தார்.

இதேவேளை, நேஸ்வி பிரபுவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு போர்க் குற்றச் செயல் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கப்படும் என்று சிறீலங்கா அரசு தற்போது அறிவித்துள்ளது. இது தொடர்பில் சிறீலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன கூறுகையில், இலங்கையில் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தருஸ்மன் அறிக்கையில் 40 ஆயிரம் பேர் இறுதிப் போரில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதும், நேஸ்வி பிரபு அதனைப் பொய்யாக்கியுள்ளார். அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்கள் சில ஆயிரம் பேர் மட்டுமே என்று பன்னாட்டு அரங்கில் உண்மையைக் கூறிய நேஸ்வி பிரபு, எப்போது வேண்டுமானாலும் எங்களது நாடாளுமன்றத்துக்கு வரலாம். இறுதிக் கட்டப் போரின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழக்கவில்லை எனவும், 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இலங்கை தொடர்பில் குற்றம் சுமத்தி வரும் தரப்பினருக்குப் பிரபுவின் கருத்தைப் பதிலடியாகக் கொடுக்க முடியும் என்றார்.

இதேவேளை, சிறீலங்காவின் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பாக பிரித்தானிய பிரபுக்கள் சபையில், நேஸ்வி பிரபு வெளியிட்ட அறிக்கை, பிரித்தானியாவின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை என்று கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரபுக்கள் சபையில் நேஸ்வி பிரபு, பிரித்தானிய அரசின் சார்பில் உரையாற்றவில்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவருக்கு தனது சொந்தக் கருத்தை வெளியிடும் உரிமை உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட 30–1 தீர்மானம் மற்றும் அதனை மீள் உறுதிப்படுத்தி நிறைவேற்றப்பட்ட 34–1 தீர்மானம் ஆகியவற்றின் போது, உண்மை கண்டறியும் குழுவை நியமிப்பது உள்ளிட்ட சிறீலங்கா அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்று மாறு நாங்கள் தொடர்ந்து ஊக்கமளிப்போம், என்றும் பிரித்தானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் சிங்கள அதிபர் மகிந்த ராஜபக்சவின் அடிதடி ஆலோசகர் என்று பெயர் போன சஜின் வாஸ் அவர்களின் செலவில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சிறீலங்காவிற்குப் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குடும்பத்துடன் உல்லாசப் பயணங்கள் மேற்கொண்டமை பிரித்தானிய அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. பிரித்தானியாவின் வட அயர்லாந்தில் இயங்கி வரும் சனநாயக ஐக்கியவாதக் கட்சி எனத் தமிழில் பொருள்படும் டி.யூ.பி கட்சியின் நாடாளுமன்ற

தொடர்ச்சி 04ம் பக்கம்

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### யாழ் விபத்தில் இருவர் பலி

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி – ஏ9 வீதி – நுணாவில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 26ம் திகதி இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பேருந்தும் உந்துருளியும் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில், நுணாவில் மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா மோகன்ராஜ் (30), நுணாவில் மத்தியைச் சேர்ந்த யோகராசா சபேஸ்குமார் (26) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

### விபத்தில் மனைவி பலி! கணவன் படுகாயம்!



யாழ்ப்பாணம் – சாவகச்சேரி மீசாலை ஏ 9 வீதியில் பாரவூர்தியொன்று உந்துருளியுடன் மோதியதில் மனைவி சம்பவ இடத்திலேயே பலியானதுடன், கணவன் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 6ம் திகதி புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த 62 வயதுடைய சந்திரபாலன் பரமேஸ்வரி என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளதோடு, 67 வயது சின்னையா சந்திரபாலன் என்ற வயோதிபர் படுகாயமடைந்துள்ளார். வீதியால் வந்த கார் ஒன்றை சோதனை செய்வதற்காக சிறீலங்கா நாட்டின் கால்துறையினர் மறித்தபோது அதிலிருந்து இறங்குவதற்காக சாரதி கார் கதவைத்திறந்த வேளையில், அதனை விலத்திச் செல்ல முயற்சித்த தம்பதிகள் பயணித்த உந்துருளியுடன் பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### விபத்தில் காயப்பட்டிருந்த குடும்பத்தவர் மரணம்!

விபத்தில் படுகாயமடைந்து கோமா நிலையில் இருந்துவந்த குடும்பத் தலைவர் உயிரிழந்தார். இணுவில் மத்திய கல்லூரியை அண்மித்து கடந்த மாதம் 21ம் திகதி பயணித்துக் கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது. சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த சின்னையா குணரட்ணம் (வயது 72) என்பவரே உயிரிழந்தார். இவர் உந்துருளியில் தனது மனைவியுடன் சென்றுகொண்டிருந்தபோது இவரை முந்திச் செல்ல முற்பட்ட வாகனம் இவரது உந்துருளி மீது மோதியதாகக் கூறப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பயனளிக்காமல் கடந்த வாரம் மரணமடைந்தார்.

### காணாமற் போனவர் சடலமாக மீட்பு!


மன்னாரில் காணாமல் போனவர் 37 நாட்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மன்னார் மடுவில் அழுகி, உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட உடலம் குறித்து விசாரித்தபோது, சடலமாக மீட்கப்பட்டவர் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சன் நீக்கிலாஸ் (வயது 56) என அடையாளம் காணப்பட்டார். ஆண்டாங்குளம் சந்தியில் அழககம் (சலூன்) நடத்தி வரும் சன் நீக்கிலாஸ் கடந்த ஒக்டோபர் மாதம் 25ம் திகதி மாலை 4 மணியளவில் காணாமற்போயுள்ளார். இது தொடர்பில் அவரது மனைவி முறைப்பாடு பதிவு செய்திருந்தார். இந்த நிலையிலேயே அவர் சடலாமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

### தனிமையில் வாழ்ந்தவர் தீ மூட்டிச் சாவு!

யாழ். பருத்தித்துறை, திக்கத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் தீயிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார். சந்திரசேகரம்பிள்ளை இராசலிங்கம் (வயது 59) என்பவரே உயிரிழந்தார். இவர் மனைவியைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்தார் என்றும், பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த 7ம் திகதி வியாழக்கிழமை அதிகாலை அவர் தீ மூட்டினார் என்றும், அயலவர்கள் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

### மீன்பிடிக்கச் சென்றவர் குளத்தில் மூழ்கி உயிரிழப்பு

முல்லைத்தீவு, குமுழமுனையில் குளத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார். ஆறுமுகத்தான் குளத்தில் மீன்பிடிப்பதற்காக வள்ளத்தில் சென்றபோதே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். ஆறுமுகத்தான்குளக் கிராமத்தைச் சேர்ந்த இரத்தினம் உதயசங்கர் (வயது 26) என்பவரே உயிரிழந்தார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார். கடந்த 8ம் திகதி வெள்ளிக்கிழமை மீன்பிடிப்பதற்காக ஐந்து பேர் ஒரு வள்ளத்தில் குளத்துக்குச் சென்றனர். வள்ளம் கவிழ்ந்ததில் நால்வர் நீந்திக் கரை சேர ஒருவர் நீரில் மூழ்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis
CITYEXPRESS
We Move the Businessclass

# தமிழர்களைப் பீடிக்கும் மறதி நோயும், புனிதராகும் சங்கரியும்

**கலாநிதி சேரமான்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகவும், தத்துவாசிரியராகவும் திகழ்ந்த தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பதினோராம் ஆண்டு நினைவு நாள் அண்மித்திருக்கும் வேளையில் இராஜவரோதயம் சம்பந்தனின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றீடான கூட்டணி ஒன்று வீ.ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் உருவாகியுள்ளது.

ஐக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழரசுக் கட்சியின் முன்னாள் இளைஞரணித் தலைவர் சிவகரனின் தலைமையிலான கட்சி, புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியவை இக் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

**1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியதில் இருந்து 1983ஆம் ஆண்டு ஆறாம் திருத்தச் சட்டத்தை ஜெயவர்த்தன கொண்டு வரும் வரையான ஆறாண்டு காலப் பகுதியில் தமிழீழத்தை நிறுவுவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று அவரிடம் கேட்டால் போதும். ஆள் ஆடிப் போய் விடுவாராம்..!**

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் கடந்த எட்டரை ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவினதும், ஏனைய உலக வல்லாதிக்க சக்திகளினதும் பொம்மலாட்டத்திற்குப் பலிக்கடாவாக்கி வரும் சம்பந்தரின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றீடான அரசியல் முன்னணி ஒன்று உருவாகுவது வரவேற்கத்தக்க ஒன்றே. இவ்வாறான அரசியல் முன்னணி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை விட்டுக்கொடுப்பின்று முன்னிறுத்தி வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் போன்றோரின் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் உருவாக்கப்படும் என்றே முதலில் எதிர்பார்க்கப்பட்டது.



எனினும் இவ்வாறு நடைபெறுவதற்குப் பதிலாக வீ.ஆனந்தசங்கரியின் தலைமையிலான கூட்டணி உருவாகியிருப்பது அதிர்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இக் கூட்டணி உருவாக்கப்பட்ட இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழீழ தாயகத்தில் இயங்கும் பொது அமைப்புக்களும் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை என்ற மூன்றாவது அரசியல் அணியை உருவாக்கியிருப்பது ஓரளவுக்கு ஆசுவாசமளிக்கக் கூடிய செய்திதான். ஆனாலும் இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் எதிர்த்து நின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இப்பொழுது இரண்டு கூட்டணிகளை எதிர்த்து தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் சாவலுக்கு ஆளாகியிருக்கின்றது என்பதே யதார்த்தமாகும்.




இது ஒரு புறமிருக்க, ஆனந்தசங்கரியின் தலைமையில் புதிய கூட்டணி உதயமாகியதை அடுத்து, அவரைப் புனிதராக்கும் படலம் சில தரப்பினரால் தொடங்கப்பட்டுள்ளது. சங்கரியாரின் வசம் இருப்பது தந்தை செல்வாவும், ஜி.ஜி.பொன்னம்பலமும் இணைந்து உருவாக்கிய ஐக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம். தமிழீழத் தனியரசுக்கான வரலாற்றுத் தீர்மானத்தை 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா நிறைவேற்றியது இந்த உதயசூரியன் சின்னத்தில் தான். இதே சின்னத்தில் போட்டியிட்டே தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான மக்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையை 1977ஆம் ஆண்டு நடந்தேறிய பொதுத் தேர்தலில் ஐக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றது. சம்பந்தருக்கு முன்னரே நாடாளுமன்ற ஆசனத்தில் அமர்ந்தவரான சங்கரியாரும் இதே தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

தமிழீழத் தனியரசை நிறுவப் போவதாக மக்களுக்கு அளித்த ஆணையை அதன் பின்னர் சங்கரியார் காற்றில் பறக்க விட்டது வேறு கதை.

கறுப்பு ஆடி இனவழிப்பின் தொடர்ச்சியாக 1983 ஆவணித் திங்களில் குள்ளநரி ஜூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தன கொண்டு வந்த ஆறாம் திருத்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட மறுத்து இந்தியாவில் சில காலம் தான் அஞ்ஞாதவாசம் புரிந்தது பற்றியும், அதனால் சட்டத்தரணி தொழிலைத்

தொடர்ச்சி 22ம் பக்கம்

### ஒதியமலை படுகொலையின் 33ம் ஆண்டு நினைவு

ஒதியமலை படுகொலையின் 33ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 2ம் திகதி ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் இடம்பெற்றது. முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் 1984ம் ஆண்டு டிசெம்பர் 2ம் திகதி சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினர் ஒதியமலை கிராமத்திலுள்ள வீடுகளில் இருந்த ஆண்களை ஒரு இடத்திற்கு கூட்டிச் சென்று சுட்டு படுகொலை செய்திருந்தனர். இந்த படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை இராணுவத்தினர் இடித்து அழித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 33வது ஆண்டு நினைவு அனுட்டிக்கப்பட்டுள்ளது. இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் தீபம் ஏற்றியும் ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் விசேட ஆராதனையில் ஈடுபட்டும் தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.





### இனப்படுகொலைப் படையினருக்கு ஐ.நா. மதிப்பளிப்பு

தென் சூடானில் ஐ.நாவின் அமைதி காப்புப் படையில் அங்கத்துவம் வகிக்கும் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த 16 படை அதிகாரிகள் மற்றும் 50 படையினர், இரண்டாம் நிலை மருத்துவமனையில் 6 மாத கால சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக மதிப்பளிக்கும் வகையில் அவர்களுக்கான உத்தியோகபூர்வப் பதக்கம் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வாரம் தென் சூடானில் இடம்பெற்றது. சிறீலங்கா இராணுவத் தளபதியின் பணிப்புரைக்கமைய அவரது பிரதிநிதியாக இராணுவ மருத்துவ சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் கே.பி.சுமனபால, ஐ.நாவின் அழைப்பை ஏற்றுத் தலைமை அதிதியாக இந்த நிகழ்வில் பங்கேற்றார். ஐ.நா. சபையால் அமைதிப் படையிலுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் இந்த நிகழ்வில் வைத்து மதிப்பளிக்கப்பட்டனர்.

இதேவேளை, மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் அமைதிகாக்கும் பணிகளுக்காக 200 சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். ஐ.நா.வுடன் இணைந்து பணியாற்றும் விதமாக இவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இராணுவத்தின் 10 ரெஜிமெண்ட்டுக்களைச் சேர்ந்த 200 பேரே இவ்வாறு மாலி நோக்கி அடுத்த சில வாரங்களில் செல்லவுள்ளனர்.

பரிஸ்தமிழ் .கொம் www.ParisTamil.Com
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## சிங்கள, முஸ்லிம் மக்களை வடக்கில் குடியேற்றட்டாம்!

புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்கள் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னர் வடக்கிலிருந்த முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அந்தந்தப் பகுதிகளில் மீண்டும் குடியமர்த்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் வெளிச்சம் அமைப்பினரால் கொழும்பு தேசிய நூலகச் சாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

## வடக்கில் பால்வினை தொற்று மிக வேகமாக அதிகரிப்பு

வடக்கு மாகாணத்தில் பால்வினை (எச்.ஐ.வி) தொற்று கடந்த காலங்களிலும் பார்க்க படிப்படியாக அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள மருத்துவ நிபுணர் பிரியந்த பட்டகல மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஆண்களிடையேயான ஓரின சேர்க்கையாளர்கள் மூலமாகவே தற்போது இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இதுவரை 35 பேர் எச்.ஐ.வி தொற்றுடன் எமது சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்துள்ளார்கள். அவர்களில் ஆறு பேர் உயிரிழந்துள்ளார்கள். இவர்களில் 25 பேர் எதுவிதமான வெளிநாட்டு தொடர்புகளும் அற்றவர்கள்.

யாழ்ப்பாணத்தில் எச்.ஐ.வி தொற்றுக்கு உட் பட்டவர்கள் 80 பேருக்கு மேல் இருக்கலாம் ஆனால் அவர்கள் இதுவரை எமது சிகிச்சை நிலையத்தை நாடவில்லை. இதேபோன்று வவுனியாவை சேர்ந்த ஆறுபேர் அநுராதபுரம் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மனைவியை கொலை செய்தவருக்கு 10 ஆண்டுகள் சிறை!

மனைவியின் உடலில் தீப்பற்ற வைத்து கொலை செய்ய குற்றத்துக்கு குடும்பத்தலைவருக்கு 10 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம். வடமராட்சி, மணற்காடு குடத்தனையில் 2013ம் ஆண்டு டிசெம்பர் 3ம் திகதி இளம் குடும்பப் பெண் உடலில் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றன. அதன் நிறைவில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு மீதான விளக்கம் இடம்பெற்று வந்த நிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்வாளிக்கு 10 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனையும், 5 ஆயிரம் ரூபா தண்டம் பணம் செலுத்த வேண்டும் எனவும், அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பளித்தது.




**கேள்வி:–** படங்களை எடுத்து அவர்களின் அனுமதியும் இல்லாமல் பேஸ்புக் போன்ற சமூக வலைத் தளங்களில் ஏற்றுகின்றார்களே, இது தவறில்லையா..? இவர்களை என்ன செய்யலாம்..?

பு.தேவநாயகி செல்ரோன் பிரான்ஸ்

**பதில்:–** சட்டப்படியும் ஏன் நியாயப்படியும் இது தவறுதான். இவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தங்கள் படங்களுக்காக வழக்குத் தொடர்ந்து போராடி வருபவர்களும், அதில் வெற்றி பெற்றவர்களும் இருக்கின்றார்கள். ஆனாலும், அனுமதியின்றி வெளியிடப்பட்ட சில படங்கள் உண்மைகளைப் புரியவைத்திருக்கின்றது. மக்களைக் கொந்தளிக்க வைத்திருக்கின்றது. ஏன் சிலரின் வாழ்க்கையையும் மாற்றியமைத்திருக்கின்றது. இதற்கு அண்மையில் கூட நல்லதோர் உதாரணம் இருக்கின்றது.



இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கசநோயால் இறந்துபோன மனைவியின் உடலை எடுத்து செல்வதற்கு வசதியில்லாத ஒருவருக்கு மருத்துவமனை அவசர வாகனம் (அம்புலன்ஸ்) வழங்க மறுத்துவிட்டது. வேறு வாகனங்களிலும் கொண்டு செல்ல வசதியின்றி தனது மனைவியின் உடலை தனது தோள் மீது சுமந்துகொண்டு தானா மாஜ்கி என்ற அந்தக் கணவன் 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தனது கிராமத்திற்கு நடந்துசென்றார். அவருடன் அவரின் மகளும் அருகில் சென்றார். இந்தப் படத்தை ஒருவர் எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டபோது அதற்கு உலகம் முழுவதிலும் இருந்து வேதனைகள் வெளிக்கிளம்பின.



ஆனால், அதன் எதிரொலி இப்போது அந்தக் கணவனின் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றியிருக்கின்றது. அந்த ஒற்றைப்படம் அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் நல்லதொரு வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அந்தப் படத்தைப் பார்த்த பஹ்ரைன் நாட்டின் பிரதமர் கலிபா பின் சல்மான் அல் கலிபா 9 இலட்சம் இந்திய ரூபாவை வழங்கினார். அந்தப் படத்தைப் பார்த்த மக்கள் பலரும் மாஜ்கிக்கு தங்களால் முடிந்தளவிற்கு நிதி உதவிகளைச் செய்தனர். வீடில்லாத இவருக்கு வீடு கட்டிக்கொடுக்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. இவரது 3 மகள்களும் படிக்கும் பாடசாலை நிர்வாகம், இவர்களுக்கு இலவச கல்வி அளித்து வருகிறது. பலரது உதவியால் தற்போது மாஜ்கி நல்ல வசதியுடன் வாழ்ந்து வருகிறார். மனைவியின் உடலத்துடன் நடந்து போன இவர் தற்போது விலையுயர்ந்த உந்துருளியில் பயணிக்கும் நிழற்படங்கள் வெளியாகியுள்ளன. மறுமணம் புரிந்துகொண்ட மாஜ்கியின் இரண்டாவது மனைவி தற்போது கர்ப்பமாக இருக்கிறார். இத்தனையும் மாற்றிப்போட்டதும், ஏழையாய் இருந்தவரை இலட்சாதிபதியாக்கியதும் அந்த ஒற்றைப் படம்தான்.





வியட்நாம் போரை முடிவிற்குக் கொண்டுவந்த சிறுமியின் நிர்வாண ஓட்டமும், சிரியாவின் பேரழிவை உலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டிய சிறுவன் அலான் குர்தியின் மரணமும் வெறும் ஒற்றைப் படங்களால் நிகழ்ந்தவைதான். எனவே, மாற்றத்தை ஏற்படுத்தும் என்றால் அந்தப் படங்களை அனுமதியில்லாமலேயே பிரசுரிக்கலாம். அதனை விடுத்து வெற்றுத்தனமாகப் படங்களை போடுபவர்களை ஒன்றும் அத்தனை இலகுவில் தடுக்கமுடியாதுதான்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** சீனாவிடம் இருந்து விடுதலை வேண்டுமென்று திபெத் கேட்கவில்லை. திபெத் பகுதிக்கு வளர்ச்சி வேண்டும் என்றுதான் கேட்கிறோம் என திபெத்திய புத்த மதத் தலைவர் தலாய் லாமா கூறியுள்ளார்.

**எழும் கேள்வி:-** பிறகெதற்கு நாடு கடந்த திபெத்திய அரசாங்கம்?

★★★★ ★★★★

**செய்தி:-** ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள், ஜனநாயகத்துக்கு எதிரானவை என ரணில் விக்கரமசிங்க தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்களை ஏன் இன்னும் குறையவில்லையாம்...?

★★★★ ★★★★

**செய்தி:-** நாட்டில் 74 சதவீதமான சிங்களவர்களும், இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். எனவே, எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என்று அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது என மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** அதுதான் நாடு முழுவதும் புத்தரை விதைக்கின்றீர்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** மியான்மரில் ரோஹிங்கயா முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் 'இன அழிப்பு' நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து, அமெரிக்க நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

**எழும் கேள்வி:-** மியன்மாரில் நடந்தால் இனஅழிப்பு, இலங்கையில் நடந்தால் மனித உரிமை மீறலா..?

★★★★ ★★★★

**செய்தி:-** அடிப்படைக் கொள்கையிலிருந்து ஒரு போதும் விலக மாட்டோம் என தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உங்கள் அடிப்படைக் கொள்கைதான் என்ன..? அடிபணிவதுதானோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் வெளிநாடு செல்வதற்கு சிறீலங்கா மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

**எழும் கேள்வி:-** புலம்பெயர் நாடுகளில் குழப்பம் இன்னும் அதிகரிக்குமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** 61 வருட கால தனது வாழ்க்கையில் அதிகமாக தலைமுடி உதிர்ந்தது கடந்த ஆறு மாத காலத்தில் என்று சிறீலங்கா நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

**எழும் கேள்வி:-** தலையா போனது, முடிதானே..?

★★★★ ★★★★

**செய்தி:-** சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய ஓட்டை விழுந்திருப்பதாகவும், அதன் வழியாக அதிவேகத்தில் வெளியேறும் சூரிய காற்று, பூமியை சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைகோள்கள் மற்றும் சூரிய மின்சக்தி கருவிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என நாசா குறிப்பிட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** ஓசோனிலைதான் ஓட்டையைப் போட்டுவிட்டார்கள் என்று பார்த்தால், சூரியனிலும் கூடவா..?

★★★★ ★★★★

**செய்தி:-** சமஷ்டியுடன் கூடிய ஒருமித்த நாடு இதுவே எமது எதிர்பார்ப்பாகும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் போச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.எம்.சுமந்திரன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அப்ப வட்டுக்கோட்டைக்கு வாக்களித்த மக்கள் என்ன முட்டாள்களா..?

# கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் கொழும்பின் உறுதியின் பின்னுள்ள மர்மம்

'தாயகத்தில் இருந்து'
காந்தரூபன்

இலங்கைத் தீவில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அதை நிலைநிறுத்தவேண்டிய தமிழ் அரசியல் சக்திகள் சிங்கள தேசத்தின் நகர்த்தல்களுக்கு ஆடும் காய்களாக மாறியிருக்கின்றனர். சிங்களம் எதிர்பார்க்கும் திசைக்கு ஆடவேண்டிய கட்டாயம் தமிழ் அரசியல் சக்திகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதை உடைப்பதற்கு திட்டம் தீட்டி அதன்படி செயற்பட்டுக்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் சில சிங்களத் தீவிரவாதிகளுக்கு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை தேவைப்படுகின்றது. கூட்டமைப்பிற்குள் பிளவுகள் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இன்னும் சில வருடங்களுக்காவது கூட்டமைப்பு ஒற்றுமையுடன் இருப்பதையே ரணில் விரும்புகின்றார்.



இங்கு ஒரு உண்மை தெளிவாகத் தெரிகின்றது. கொழும்பில் இருந்த சுமந்திரன் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்து மன்னிப்புக் கேட்கின்றார் என்றால், அதற்குள் உள்ள முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பின்னர் தமிழ் மக்களின் அரசியல், சூனியமாக மாறியிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு நேர்மையுடன், அப்பளுக்கற்ற பணியாற்றக் கூடிய எவரையும் ஈழத்தமிழ் அரசியலில் தற்போது இனம்காண முடியவில்லை. இதனாலேயே தமிழர்களின் அரசியலை தென்னிலங்கையும் இந்தியாவும் கையாளும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் நடத்துபவர்கள் எனக் கூறப்படுவோரில் ஒரு தரப்பினர் தென்னிலங்கைச் சிங்களவர்களின் கைப்பொம்மைகளாக இருக்கின்ற அதே வேளை, மறு தரப்பினர் இந்தியாவின் கைப் பொம்மைகளாக இருக்கின்றனர். இதனால் தமிழ் மக்களின் அரசியல் மோசமாக மாசுபட்டிருக்கின்றது.

சிங்கள நாடாளுமன்றின் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்காது எனக் கூறி ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த தமிழீழத் தேசியத் தலைவர், பிற்காலத்தில் அதே சிங்கள நாடாளுமன்றுக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக தங்களால் - புலிகளால் - தெரிவுசெய்யப்பட்டவர்களை அனுப்பினார். இது தேசியத் தலைவரின் இராஜதந்திரம்.

அந்த இராஜதந்திரம் அப்போது தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் வெற்றிகளைப் பெற்றுத் தந்தது. மாமனிதர் ரவிராஜ், மாமனிதர் சிவநேசன், மாமனிதர் யோசப் பரராஜசிங்கம் போன்ற தமிழ்த் தேசியவாதிகள் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தமையால் கூட்டமைப்பு அச்சரம் பிசகாமல் இயங்கியது.

அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் முகமாக இயங்கியது எனக் கொள்ள முடியாது. அந்தப் பெரும் பணியை புலிகளின் அரசியல்துறை மேற்கொண்டு வந்தது. சிறீலங்கா நாடாளுமன்றில் சில சலசலப்புக்களை ஏற்படுத்துவதற்கும் புலிகள் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையை வெளி உலகுக்கு அம்பலப்படுத்துவதற்குமே தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அங்கீகாரம் வழங்கினர்.

கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்றுவிட்டு வந்த சுரேஸ், கஜேந்திரகுமாருடனான கூட்டணியை அடியோடு வெறுத்தார். நேரே ஆனந்தசங்கரியுடன் சென்று ஒட்டிக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கள் இருக்கும் வரை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்பணியை முன்னெடுத்து வந்தது. ஆனால், இறுதி யுத்தம் தொடங்கிய பின்னர், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அவலங்கள் நேர்ந்தபோது, மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டபோது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர்.

இரா. சம்பந்தன் எல்லோரையும் விட சாணக்கியமாக நடந்துகொண்டார். விடுதலைப் போராட்டம் அழிவதை அவர் விரும்பினார். ஆனால், ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் அப்போது புலம்பெயர் தேசங்களில் நின்று தமிழ்த் தேசியப் பணி ஆற்றிக்கொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பின்னர் தற்போது தமிழரின் அரசியல் களம் படுமோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. தமிழ் அரசியல்வாதிகள் எனக் கூறிக்கொள்வோர் சிங்களவர்களின் நலன்களிலேயே அதிகளவு அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் குத்துவெட்டுக்கள் தொடங்கியிருக்கின்றன. தொகுதிப் பங்கீடு, ஆசன ஒதுக்கீடு, போன்ற விடயங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பிரிந்து செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கட்சியும் அதன் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரனும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் கூட்டமைப்பில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். இது சுரேசிற்கு திட்டமிட்டு இழைக்கப்பட்ட அநீதி. அதில் இருந்து அவர் இன்னமும் மீள முடியவில்லை.

இந்நிலையில், உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான தொகுதிப் பங்கீடுகள் நடைபெற்றபோது, கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மற்றும் புளொட் ஆகிய கட்சிகளை ஓரம்கட்டுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி முயன்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள எந்தவொரு பிரதேச சபைகளிலும் தவிசாளர் (தலைவர்) பதவியை ரெலோவிற்குத் தரமுடியாது என தமிழரசுக் கட்சி அடித்துக் கூறியது. இதனால் நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் ரெலோ தான் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்வதாக அறிவித்தது.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## இருப்பவர்கள் இருந்தால் இப்படி நடந்திருக்குமா?

வவுனியா – ஓமந்தை அலகல்லு போட்டகுளத்தில் 16 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய சம்பவத்துடன் தொடர்புபட்ட ஆசிரியருக்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், சமூகத்தில் இனி இவ்வாறு இடம்பெறக்கூடாது என்றும் தெரிவித்து நொச்சிக்குளம் மகளிர் கிராம



அபிவிருத்திச்சங்கத்தினால் கடந்த 9ம் திகதி சனிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இடம்பெற்றது. ஓமந்தை ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவிற்கு முன்பாக ஒன்றிணைந்த மகளிர் அமைப்



பினர் பிரதான ஏ9 வீதியூடாக ஓமந்தை சிறீலங்காக் காவல் நிலையத்திற்கு பேரணியாகச் சென்று பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

இப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் 'இருப்பவர்கள் இருந்தால் இப்படி நடந்திருக்குமா?', 'சிறுமியை பலாத்காரம் புரிந்தவருக்கு தண்டனை வழங்கு', 'இதற்கு உடந்தையாக இருந்த தாயார் மீது நடவடிக்கை மேற்கொள்' போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்துகொண்டனர்.

குறித்த ஆசிரியர் முன்னர் கற்பித்த 10ற்கும் மேற்பட்ட பாடசாலைகளிலும் சிறுவர்கள் மீது பாலியல் குற்றச்சாட்டு சாட்டப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நொச்சிக்குளம் மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் குற்றசாட்டினை முன்வைத்துள்ளனர். சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளதாகவும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் சிறீலங்காக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு முதல்வர் - அவுஸ்திரேலிய தூதர் சந்திப்பு

வடக்கின் நிலமைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு, யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்ட உயர்ஸ்தானிகர் பிரின் ஹஸ்டன் தலைமையிலான குழுவினருக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று, கைதடியிலுள்ள வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்கள், செல்பேசி இணைப்பு ஊடாக பணப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கான நிதி உதவியை, அவுஸ்திரேலியா அரசாங்கம் வழங்கியுள்ளதென, யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாக, சி.வி.விக்னேஸ்வரன் கூறினார். இவ்வாறான நிலையங்கள் 200 யாழில் அமைக்கப்படவுள்ளதுடன் முதற்கட்டமாக 20 அமைக்கப்படவுள்ளன என்றார்.

# கூட்டமைப்பை நீண்டும்.....

இந்த இடத்தில்தான் சிங்களத்தின் உண்மை முகம் அம்பலப்பட்டது. ரெலோவின் முடிவைக் கேள்வியுற்ற ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே இரா.சம்பந்தனையும் சுமந்திரனையும் தொலைபேசியில் தொடர்புகொண்டார். புளொட் தலைவர் சித்தார்த்தனுடனும் பேசினார். கூட்டமைப்பின் ஒற்றுமை முக்கியம் என அவர் வலியுறுத்தினார். எப்பாடுபட்டேனும் கூட்டமைப்பை பிரியவிடக்கூடாது என அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

அவர் அப்படிச் சொன்னவுடன் மறுநாளே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்திற்கு ஓடிச் சென்றார். அங்கு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி நடந்த சம்பவங்களுக்காக பகிரங்க மன்னிப்புக் கோரினார். இது ஏன் நடைபெற்றது?

இங்குதான் புதிய அரசமைப்பு உருவாக்கம் முக்கியம் பெறுகின்றது. எப்படியாவது புதிய அரசமைப்பை நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் சிங்களத் தரப்பு துடியாய்த் துடிக்கின்றது. தேசிய அரசு எனச் சொல்லப்படும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றி அரசமைப்பை நிறைவேற்ற முடியாது. அப்படி நிறைவேற்ற முற்பட்டால் கூட்டமைப்பை விட்டு வெளியேறும் கட்சிகள் கடுமையாக எதிர்க்கும்.

இந்நிலையில், ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற அசமைப்பை நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை ஏற்படும்.



இதனால், கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் ரணிலும் சுமந்திரனும் உறுதியாக நின்றார்கள்.

இங்கு ஓர் உண்மை தெளிவாகத் தெரிகின்றது, கொழும்பில் இருந்த சுமந்திரன் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்து மன்னிப்புக் கேட்கின்றார் என்றால், அதற்குள் உள்ள முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

தமிழினத்தின் சுதந்திர தாகத்தை அடியோடு அழித்து, எமது போராட்டத்தின் நியாயப்பாடுகளைக் கொச்சைப்படுத்தி, மாவீரர்களின் தியாகங்களை வீணாக்கி, தமிழ் மக்களின் உயிரிழப்புக்களை எள்ளி நகையாடிக்கொண்டிருக்கும் சுமந்திரன் தலைமையில்தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணித்துக்கொண்டிருக்கின்றது.

முப்பது வருடப் போராட்டத்தில் முப்பதாயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களை ஈந்திருக்கின்றோம், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை இழந்திருக்கின்றோம். இதற்குப் பின்னரும் ஒற்றையாட்சித் தத்துவத்திற்குள் நிற்பதற்குத் தமிழ் மக்கள் முட்டாள்கள் என நினைக்கும் சுமந்திரனை ஒட்டுமொத்த தமிழினமும் அடித்து விரட்டவேண்டும்.

தமிழ் மக்களின் இந்தக் கையறு நிலையைப் பயன்படுத்த இந்திய அரசு மீண்டும் ஈழத்தமிழர் அரசியலுக்குள் நேரடியாகக் களம் புகந்துள்ளது. அண்மைக் காலச் செயற்பாடுகள் இதை மீண்டும் உணர்த்துகின்றன.

கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிக்கொண்டிருந்த சுரேஸ் பிறேமச்சந்திரன், தமிழரசுக் கட்சியின் எதேட்சாதிகாரப் போக்குக்கு எதிராக, புதிய கூட்டு ஒன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பார் எனக் கூறினார்.

கஜேந்திரகுமாரும் சுரேஸ் பிறேமச்சந்திரனும் இணைந்து பொதுமக்கள் சந்திப்புக்களையும் நடத்தினர். ஆனால், கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்றுவிட்டு வந்த சுரேஸ், கஜேந்திரகுமாருடனான கூட்டணியை அடியோடு வெறுத்தார். நேரே ஆனந்தசங்கரியுடன் சென்று ஒட்டிக்கொண்டார்.

ஆனந்தசங்கரி இந்தியாவின் கைக்கூலி. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுமுழுதான எதிரி. சுரேஸ் பிறேமச்சந்திரன் முன்னர் இந்தியாவுடன் நெருக்கமாகப் பழகியவர். இந்த நிலையில்தான் அவரும் தற்போது ஒரே குடைக்குள் வைத்துப் பார்க்கப்படுகின்றார்.

எது எப்படியோ, ஈழத் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தை, கௌரவத்தை, தன்மானத்தை இழந்து, நடுத்தெருவுக்குத் தள்ளப்படும் நிலையை எந்தத் தமிழரும் இனிமேல் அனுமதிக்க மாட்டார்கள். தமிழினத் துரோகிகள் எவராவது சிங்களத்தின் அனுசரணையோடு தமிழ் மக்களின் முதுகில் சவாரி செய்ய இடமளிக்கக்கூடாது. இந்த விடயத்தில் புலம்பெயர் உறவுகள் மிகுந்த கரிசனையுடன் இருக்கவேண்டும்.

# அதிகரிக்கும் வான்கோழிகள்!

அண்மையில் தாயகத்தில் இருந்து முகநூலில் ஒரு மாணவன் பதிவிட்ட வாசகம் இது ?தாயையும் தாய் நாட்டையும் பிரிந்து செல்லும் வலிமிகுந்த வாழ்வியல் தமிழனுக்கு மட்டுமே சொந்த மானது?

ஆம் அந்த மாணவன் தனது 14 ஆவது வயதில் வன்னியிலே 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போது குண்டுமழைகளுக்கு நடுவில் தப்பி, தனது தாய், சகோதரர்களுடன் யாழ். சென்றிருந்தான். அங்கு தனது கல்வியை மேற்படிப்புவரை தொடர்ந்திருந்தான். அந்தக்காலப் பகுதியில் அவன் பல இன்னல்களைச் சந்தித்திருந்தான். எதிரியின் வன்கொடுமைகளுக்கு மத்தியில் இருந்தபோதும் அவனது முகநூலில் தேசியத்தின் உணர்வுகள் வற்றாது பாய்ந்துகொண்டே இருந்தன. அண்மையில் அவனது முகநூலில் மேற்படி



வாசகம் இடுகையிடப்பட்டிருப்பதைக் கண்ணுற்றபோது, ஆச்சரியமாக இருந்தது. நாம் பெற்ற அனுபவத்தை அவனும் பெற்றுவிட்டான். ஆம் அவனும் வலிகளைச் சுமந்து, மேலும் வலிகளை சுமப்பதற்குத் தயாராய் புலம் நோக்கி புறப்பட்டுவிட்டான் என்பதை பின்னர் அறியமுடிந்தது.

யுத்தம் நிறைவடைந்து அங்கு எல்லாம் வழமை என்று பறைசாற்றும் அதிமேதாவிகள் ஏராளம், இருந்தாலும் அங்கு வாழ் தகவு என்பது மிகக் குறைவேதான். இராணுவ ஆதிக்கம் என்பது இன்றும் இருக்கத்தான் செய்கின்றது.

அதாவது, இலங்கையில் போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரும், தமிழர்கள் தாக்கி சித்திரவதை செய்யப்படுவதும், பாலியல் கொடுமைப்படுத்தப்படுவதும் தொடர்வதாக, சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸ் செய்தி தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 50 இற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் ஆண்கள் தாம் தற்போதைய அரசின் காலத்தில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட் படுத்தப்பட்டது தொடர்பான விவரங்களை அசோசியேட்டட் பிரசிடம் வெளிப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்தச் சம்பவங்களை எல்லாம் உண்மையில்லை என்பதுபோல், எமது தாயகத்தில் வாழும் பல இளைஞர்களின் நிலை உள்ளது எனலாம். நாம் சர்வதேசத்திடமே எமது அவல நிலையை அம்பலப்படுத்தும் நிலையில், அங்குள்ள இளைஞர்களில் பலர், தலைகீழாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சினிமா பாணியில் அவர்களின் நடவடிக்கைகள் உள்ளமை கவலைக்குரிய விடயம்.

யாழில் சிறிலங்கா காவல்துறையினரோ நாளும் வன்முறைக் குழுக்களைக் கைதுசெய்வதாகத் தகவல்களை வெளியிட்டுவரும் நிலையிலும், புதிது புதிதாக அவர்கள் உருவாகிக்கொண்டே உள்ளனர்.

இதற்கு சில சம்பவங்களைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற வாள் வெட்டில் குடும்பஸ்தர் ஒருவரின் தலை இரண்டாக பிளவுபட்டு படுகாயமடைந்து மயக்கமுற்ற நிலையில் முருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

057




## தமிழர் சொத்துக்களை சூறையாடும் சிங்களம்

– கந்தரதன்

புத்தூர் பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நின்ற 17 வயது மதிக்கத்தக்க சிறுவனே தனது நண்பர்களுடன் சேர்ந்து குறித்த குடும்பஸ்தரை வாளால்வெட்டிப் படுகாயப் படுத்தியதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் - மீசாலைப் பகுதியில் கடந்தவாரம் இரவு வேளை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் புதிய தகவல் ஒன்று வெளிவந்துள்ளது. இதுவரை யாழ்ப்பாணத்தில் ஏதேனும் வாள்வெட்டுச் சம்பவங்கள் நடைபெற்றால் ஆவா குழு, தாரா குழு போன்ற குழுக்கள்தான் காரணம் என்று கூறப்பட்டது.

ஆனால், மீசாலை வாள்வெட்டுச் சம்பவத்தை மேற்கொண்டவர்கள் 'அஜித் குழு' என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். அத்துடன், காவல்துறையினரின் தீவிர தேடுதலில், ஆவா குழுவின் உளவாளி உட்பட 100இற்கும் மேற்பட்டவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக மேலும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறதான தகவல்களும் வெளியாகியுள்ளன. குறித்த கும்பல்களிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் சினிமாவில் கதாநாயகர்கள் பாவித்த வாள்கள், கத்திகள், பொல்லுகள் போன்று உருவாக்கியவை என்றும் காவல்துறை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

எம் தமிழர் தாயகத்தை எதிரியானவன் ஆக்கிரமித்த போது எதிரியை விரட்ட எமது தேசியத் தலைவரின் படைகள் ஏந்தியதும் ஆயுதம்தான். தற்போது எம் உறவுகளை அழிப்பதற்கு இவ்வாறான குழுக்கள் ஏந்துவதை எப்படி உரைப்பது?

இதனைப் பார்க்கும் போது மூதுரையில் ஔவையார் கூறிய பாடல்வரிகள் தான் நினைவிற்கு வருகிறது.

கான மயிலாட கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினார் போலுமே
கல்லாதான் கற்ற கவி. - மூதுரை

கற்றோர் நிறைந்த சபையில் கல்வி அறிவில்லாதவர் எடுத்துரைக்கும் சூழலுக்கு ஒவ்வாத கருத்துக்கள் எவ்வாறு இருக்கிறது என்றால், அடர்ந்த காட்டில் வானில் மேகங்கள் திரண்டு வரும்போது மயிலானது தனது அழகிய தோகையை விரித்து ஆடுவதைக் கண்ட வான் கோழி தன்னையும் மயில் என நினைத்துக் கொண்டு தனது சிறிய சிறகினை விரித்து ஆடுவது போல உள்ளது.

மேற்கூறியதை இன்றைய குடும்ப, சமூக, அரசியல் சூழலுக்கு பொருத்திப் பார்த்தோமானால் வான்கோழிகளின் எண்ணிக்கையே எம்மவர் மத்தியில் அதிகம் என்பதை உணரமுடியும்.

ஆம் இதுதான் இன்றைய எமது தாயக நிலையும் கூட.

இது சிந்திக்கும் நேரமல்ல சிந்தித்து செயற்படும் நேரம்!!

(சூறையாடல்கள் தொடரும்)

## தமிழ்த் தேசிய மாவீரர் நாள் 2017 – பிரான்சு

தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த 27.11.2017 திங்கட்கிழமை பரிசின் புறநகர் பகுதியில் ஒன்றான லாப்பிளான் சென்ரெனியில் உள்ள இரண்டு மண்டபங்களில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.





## பிரான்சில் மாவீரர் நினைவுசுமந்த பேச்சு, பாட்டு போட்டிகள்!

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு , தமிழர் கலை பண்பாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் மாவீரர் நினைவு சுமந்த கலைத்திறன் போட்டிகள் கடந்த 11.11.2017 சனிக்கிழமை இடம்பெற்றிருந்தன.



## நாட்டுப்பற்றாளர் திரு.மாணிக்கவாசகம் ஜெயசோதி அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு



## தமிழீழ தேசிய மாவீரர்நாள் பிரான்சு, துலுஸ்சு 2017

தமிழர்களின் நெஞ்சங்களில் நீங்காது வாழும் தமிழீழ தேசிய மாவீரர்கள் நினைவு நாள் நவம்பர் 27ம் நாளினை பிரான்சின் தென் பகுதி பரிசில் இருந்து 750 கிலோ மீற்றர் உள்ள துலுஸ்சு மாநிலத்தில் தமிழர்கள் அதிகமாக வாழும் புறோசன் என்னும் இடத்தில் துலுஸ்சு வாழ் மாவீரர் பெற்றோர் சகோதர உரித்துடையோர் துலுஸ் பிறங்கோ தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் அங்கும் அயல் பிரதேசங்களில் வாழுகின்ற தமிழீழ மக்கள் 3ம்நாள் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகவும் எழுச்சி பூர்வமாகவும் நிறைவு கூர்ந்தனர்.



## கேணல் பருதி அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு சுமந்து மாணவ மாணவியர் மதிப்பளிப்பு!

பிரான்சில் கேணல் பருதி அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு சுமந்து புலம்பெயர் மண்ணில் உயர்கல்வியை முடித்து பட்டம் பெற்ற மாணவ மாணவியர் மதிப்பளிப்பு நிகழ்வு நந்தியார் பகுதியில் 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.



## பிரான்சில் மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு!

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் பிரான்சு மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு 19.11.2016 ஞாயிற்றுக்கிழமை பொண்டிப் பகுதியில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.





















# தமிழீழத்தில் எழுச்சியுடன் இட

தாயக விடுதலைக்காக போராடி தம்முயிரை நீத்த மாவீரர்களை நினைவுகூர்ந்து தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் 2008ம் ஆண்டிற்குப் பின்னர், சிறீலங்காப் புலனாய்வாளர்களின் எச்சரிக்கைகளுக்கும், தீவிர கண்காணிப்புக்களுக்கும் மத்தியில் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், யாழ். மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் மாவீரர் நாள் நிகழ்வுகள் எழுச்சியுடன் இடம்பெற்றுள்ளன. எங்கு பார்த்தாலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிட்டப்பட்டு, மாவீரர் எழுச்சி கீதங்கள் ஒலிக்கவிடப்பட்டு துயிலும் இல்லங்களில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு சிறீலங்கா காட்டுமிராண்டிப் படைகளால் இடித்தழிக்கப்பட்டவற்றில் எஞ்சிய கல்லறைகள் தேடியெடுக்கப்பட்டு அவற்றுக்கு மாலை அணிவித்து பெரும்திரளான தாயாக உறவுகள் அணிதிரண்டு கதறியழுது கண்ணீரால் அஞ்சலி செலுத்தியது அனைவரின் மனதையும் நெகிழவைத்தது. போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தமிழ் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்ந்து, விடுதலைப் புலிகளின் காலத்தில் நடைபெற்ற மாவீரர் நாளை ஒத்த நிகழ்வை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டதுடன், கிளிநொச்சி, யாழ்ப் பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோண மலை, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. படையினரால் அபகரிக்கப்பட்டு இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ள சில மாவீரர் இல்லங்களில் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க முடியாத நிலைமை இருந்தபோதிலும், ஏனைய அனைத்து துயிலுமில்லங்களையும் மாவீரர் தினத்திற்கு சில வாரங்கள் முன்பாகவே துப்புரவாக்கல் பணிகளை மேற்கொண்டு, செப்பனிட்டு அந்த மாவீரர்களை மக்கள் நினைவு கூர்ந்திருந்தார்கள்.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் துயிலுமில்லம், மல்லாவி வன்னி விளாங்குளம், முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், அலம்பில் மாவீரர்



துயிலுமில்லம், இரணைப்பாலை, தேவபுரம், இரட்டைவாய்க்கால், முள்ளி வாய்க்கால், களிக்காடு கோடாலிக்கல்லு ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களில் மக்களுடைய கண்ணீருடன் நினைவேந்தல் நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



**யாழ்ப்பாணத்தில்...**

யாழ். நல்லூர்க் கந்தசாமி ஆலய பின்வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. கோப்பாயில் இருந்த மாவீரர் துயிலுமில்லத்திற்கு முன்பாக சுடரேற்றி




மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். கடுமையான பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் மேற்படி இடத்தில், நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதன்போது துயிலுமில்லத்தின் நுழைவாயிலை மூடி நிறுத்தப்பட்டிருந்த பேருந்துக்குள் இருந்தும் நிகழ்வு நடைபெற்ற இடத்தில் நின்றும் புலனாய்வாளர் அங்கிருந்தவர்களை நிழற்படம் எடுத்து எச்சரித்துக்கொண்டிருந்தனர்.

அதேபோல் யாழ்ப்பாணம் உடுத்துறை, தீருவில், சாட்டி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. உடுத்துறையில், நான்கு போராளிகளின் பெற்றோர் முதலாவது சுடரினை ஏற்றினர்.

**மட்டக்களப்பில்...**

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வு நடைபெற்றது. ஈகைச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் தமது பிள்ளைகளின் வித்துடல்கள் புதைக்கப்படாமல், ஏனைய மாவீரர் துயிலுமில்லங்களில் புதைக்கப்பட்டு அங்கு செல்ல முடியாதவர்கள் இங்கு நேரில் வந்து தங்களுடைய அஞ்சலியை செலுத்த முடியும் என ஏற்பாட்டுக் குழு முன்னமே அறிவித்திருந்த நிலையில், உறவுகள் இங்கு திரண்டுவந்து ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி கண்ணீர் மல்க மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது மாவீரர்களுக்கு மூன்று நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் மல்க மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து வாகரைப் பிரதேசத்தின் மாவீரர் தாய் ஒருவரினால் மாவீரர் ஈகைச் சுடரேற்றப்பட்டது. பின்னர், கலந்து கொண்ட அனைவராலும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. வாகரைப் பிரதேசத்தில் கண்டலடி மாவீரர் துயிலும்



இல்லத்தில் பத்து வருடங்களுக்கு பின்னர் இடம் பெறும் தேசிய மாவீரர் தினத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான



சீ.யோகேஸ்வரன், சா.வியாளேந்திரன், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.சுரேஸ், ஐக்கிய தேசிய கட்சியின் கல்குடாத் தொகுதி அமைப்பாளர் ஆ.ஜெகன் உட்பட பல அரசியல் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

**அம்பாறையில்...**

அம்பாறை திருக்கோயிவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்ச்சிபூர்வமாக மாவீரர் நாள் இடம்பெற்றது. 11 வருடங்களுக்கு பின்னர் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இங்கு நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் மாவீரர்களது உறவினர்கள், முன்னாள் போராளிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு கண்ணீர் விட்டு கதறியழுது தங்களுடைய மாவீரர்களுக்கு கண்ணீரால் அஞ்சலி செலுத்தினார்கள்.

**திருகோணமலையில்...**

திருகோணமலை, சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்துகொண்டு உணர்வெழுச்சியுடன் மாவீரர் தினத்தை அனுஷ்டித்திருந்தனர்.



# ம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகள்



**கிளிநொச்சியில்...**

முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் போன்றவற்றில் உணர்வுபூர்வமாக மக்கள் வெள்ளத்துடன் அஞ்சலி இடம்பெற்றது. திரள் திரளாக வருகை தந்திருந்த மக்கள் தங்களுடைய மாவீரர்களின் தியாகங்களை நினையவுகூர்ந்து ஈகைச் சுடரேற்றி மலர்தூவி உணர்ச்சிபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.



ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் பாரிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் கடந்த வருடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு மாவீரர் நாளை அனுஷ்டித்த கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் விடுதலைப் புலிகளின் காலத்தில்



நடைபெற்ற மாவீரர் நாளை ஒத்ததாக நடைபெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு அதன் பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டு, பொதுச்சுடரும் ஏனைய நினைவுச் சுடர்களும் ஏற்றப்பட்டு, மரணித்த மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், எழுச்சிப் பாடல்களும் ஒலிக்கவிடப்பட்டிருந்தன.

**வவுனியாவில்...**

வவுனியா, ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகாமையில் மாவீரர் நாள் நினைவேந்தல் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. வவுனியா பிரஜைகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வில் மாவீரர்களை நினைவில் சுமந்து அகவணக்கத்தினைச் செலுத்துமுகமாக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் குறித்த மாவீரர் துயிலுமில்லத்தில் கூடி மாவீரர்களை அஞ்சலித்தனர். மாவீரர்களுக்கான ஈகைச்சுடரினை ஆறு மாவீரர்களின் உறவினர்கள் ஒரே நேரத்தில் ஏற்றினர். இதேவேளை



மாவீரர் துயிலுமில்லப் பாடலும் குறித்த நேரத்தில் ஒலிக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மன்னாரில்...**

மன்னார் மாவட்டத்தில் உள்ள இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் உணர்வுபூர்வமாக மாவீரர் தினம் நினைவு கூரப்பட்டது. மன்னார் மாவட்ட மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மன்னார் மாவட்டம் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும்



இல்லத்திலும், பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர் தின நினைவேந்தல்கள் மிக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களின் போது பொதுச் சுடரினை மூன்று மாவீரர்களின் தந்தையான எஸ்.ஞானப்பிரகாசம் ராசு ஏற்றி வைத்தார். அதனைத்தொடர்ந்து மாவீரர்களின்



உறவினர்கள் சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மட்டுமின்றி வேறு மாவட்டங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மேலும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, உட்பட பொது அமைப்பினர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச் சுடரினை கரும்புலி மாவீரரின் தாயார் திருமதி லூசியா ஏற்றி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ். - கிழக்கு பல்கலைகளில்...**

யாழ்ப்பாணப் பல்கலையில் மாவீரர்களின் எழுச்சிக் கீதங்கள் முழங்க, பல்கலை. மாணவர்கள், ஆசிரியர்கள் என அணிதிரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தார்கள். பல்கலைக்கழக



வளாகத்தில் அமைந்துள்ள மாவீரர்களுக்கான நினைவிடத்தில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது மாவீரர்களுக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், திரண்டு நின்ற மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர் சங்கத்தினர், ஊழியர்கள் மாவீரர் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில், மாவீரர்கள் நினைவாக கலந்துகொண்ட அனைவருக்கும் பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழத்தில் மாவீரர் தின நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்



கழக கலை, கலாசார பீடத்தின் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் அணிதிரண்டு வந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். இரண்டு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில், தொடர்ந்து ஈகைச் சுடரேற்றப்பட்டு, கலந்துகொண்ட அனைவராலும் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் உதிரம் கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.











**'கட்டலோனியா, குர்திஸ்தான் - அடுத்து ஈழம்?' என்ற தலைப்பில், இளந்தமிழகம் இயக்கம் சார்பில், கடந்த மாதம் 25ம் திகதி சென்னை மயிலாப்பூர் கவிக்கோ அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ்த் தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி.வெங்கட்ராமன் ஆற்றிய உரை.**




# கட்டலோனியா, குர்திஸ்தான் அடுத்து ஈழம்?

'கட்டலோனியா, குர்திஸ்தான் – அடுத்து ஈழம்?' என்ற தலைப்பில், முகாமையான பொருளில், இக்கருத் தரங்கை ஏற்பாடு செய்துள்ள தோழர்களுக்கு முதலில் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழீழ விடுதலைக்காக தன்னுயிரை ஈந்த தமிழீழ தேசிய மாவீரர்களுக்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் வீரவணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டலோனியா, குர்திஸ்தான் தேசிய இனப் போராட்டங்கள் குறித்து நாம் இன்னும் கூடுதலாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு, இதுபோன்ற கருத்தரங்குகள் பயன்பட வேண்டும். பொதுவாக நாம், கருத்து வாக்கெடுப்பு என்றும், பொது வாக்கெடுப்பு என்றும் மாறிமாறிப் பயன்படுத்துகிறோம். இரண்டிற்கும் சில வேறுபாடுகள் உண்டு. பொது மக்கள் பங்கெடுக்கும் வாக்கெடுப்பு தான் என்றாலும், ஒரு குறிப்பிட்ட அரசியல் நிலைப்பாட்டின் மீது நடக்கும் வாக்கெடுப்பு என்பதால், குறிப்பாக தேசிய இறையாண்மை குறித்தது என்பதால் நாம் இதனை கருத்து வாக்கெடுப்பு (Plebiscite) என்றே கூற வேண்டும். பொது வாக்கெடுப்பு எனக் கூறக்கூடாது என்பது எனது கருத்து.

அவ்வகையில், குர்திஸ்தான் – கட்டலோனியாவில் தங்கள் விடுதலையை முன்னிறுத்தி நடத்திய கருத்து வாக்கெடுப்புகளை நாம் ஆதரிக்கிறோம். கட்டலோனியா, குர்திஸ்தான் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை, தமிழ்ச் சூழலுக்கு எப்படிப் பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம் என்ற வகையில் நாம் சிந்திக்க வேண்டும். நம் எல்லோருக்கும், தமிழீழ விடுதலை என்ற நோக்கத்தில் பொது கருத்தும், அக்கறையும் இருக்கிறது. தமிழீழத்தில் ஒரு மாபெரும் இனஅழிப்பு நடந்த நிலையில், அந்த அக்கறை நம்மிடத்தில் கூடுதலாகவும் உள்ளது. ஆனால், அதனை சாத்தியப்படுத்துவதற்கான அணுகுமுறையில் நம்மிடையே வேறுபாடுகள் உள்ளன. ஐ.நா.வின் சட்டங்கள் – பிரகடனங்கள் போன்றவற்றில், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது முழுவதுமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதை வைத்துக்கொண்டு என்றைக்குமே வல்லரசு நாடுகள் தேசிய இனங்களின் உரிமைப் போராட்டத்திற்கு தானே முன்வந்து ஆதரவு தெரிவித்த வரலாறு கிடையாது. வரலாற்று நிர்பந்தங்களின் அடிப்படையிலேயே அவர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர். அதுவும் அவர்களது நாட்டு நலன்களை அல்லது அவர்களது ஆதிக்கத் தேவைகளுக்கு இசைவாக இருக்கும்போதுதான் ஆதரிக்கிறார்கள்.

பொதுவுடைமை சித்தாந்தத்தை முன்வைத்து ஆட்சி செய்த சோவியத் – சீனா போன்ற நாடுகள், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, தேச விடுதலைப் போராட்டங்களுக்கு துணையாக நின்றது உண்மை தான். ஆனால், அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்குஎதிராகசெயல்பட்டுள்ளதையும்பார்க்கிறோம்.

மாபெரும் தலைவர் மாசேதுங் உயிரோடு இருந்த காலத்தில்தான், சீனா – திபெத் தேசிய இனத் தாயகத்தை ஆக்கிரமித்தது. தேசிய இனங்களுக்கு பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை அளித்து உலகிற்கே முன்னெடுத்துக்காட்டாக விளங்கும் அரசமைப்புச் சட்டத்தை, சோவியத் ஒன்றியம் வைத்திருந்தது. அந்த உரிமையைக் கொண்டு பின்லாந்து நாடு பிரிந்து போவதை தலைவர் லெனின் ஏற்றுக் கொண்டு, தனி நாடு அமைத்துக்கொள்ள வழிவிட்டார்.

இங்குதான் நாம் சோவியத் ரசியா என்று பொதுவாகச் சொல்கிறோம். ஆனால், அவர்கள் சட்டப்படி சோவியத் ஒன்றியம் என்றுதான் சொன்னார்களே ஒழிய, நாட்டின் பெயரில் இரசிய அடையாளம் வெளிப்படையாக வராமல்தான் பார்த்துக் கொண்டார்கள்.

ஆனால், ஏட்டளவில் உரிமைகள் இருந்தாலும், நடைமுறையில் சோவியத் நாட்டில், இரசிய மொழி, இரசிய இன ஆதிக்கம் மேலாங்கியது. லெனின் காலந்தொட்டு, அங்கு இரசிய மேலாதிக்கத்திற்காக நடந்த அத்துமீறல்கள் குறித்து உக்ரேனியன் கொம்யூனிஸ்ட்டுகள் இப்போது எழுதுகிறார்கள். லாட்வியக் கொம்யூனிஸ்ட்டுகள் வெளிப்படுத்துகிறார்கள். சோவியத் ஒன்றியம் சிதறிப் போனதில், இரசிய மேலாதிக்கத்திற்கு முகாமையான பங்குண்டு.

லெனின் பிரிந்து போகும் உரிமையை ஆதரித்தாலும், தேச அரசு அமைத்துக் கொள்வதை நிபந்தனையற்று ஏற்கவில்லை. தேசியத் தன்னுரிமையை மணமுறிவு (விவாகரத்து உரிமைக்கு) இணையானதாகக் கூறினார். அதாவது பல தேசங்கள் சேர்ந்து இருப்பது குடும்பமாக வாழ்வது போல் இயல்பானது. பிரிந்து சென்று தேச அரசு அமைப்பது விவாகரத்து போல விதிவிலக்கானது. என்பதுதான் லெனின் கோட்பாடு.

ஐநா.வின் உரிமைப் பிரகடனத்தின் உறுப்பு 1 (2) இல், எல்லா தேசிய இனங்களுக்கும் தன்னுரிமை உண்டு என்று சொல்கிறார்கள். ஆனால், அதற்கு முரணாக அடுத்த பகுதியிலேயே, உறுப்பு நாடுகளின் இறையாண்மையை – பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாப்போம் என்றும் கூறுகிறார்கள். இவ்விரண்டு பிரிவுகளையும் தேவைக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது தங்களுக்கு சாதகமாக வல்லரசு நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

எப்போதுமே தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது, எதிர் நிலையான இந்த சர்வதேச சூழலில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டுதான் முன்னேறுகிறது. வரலாற்றுத் தேவைகளைக் கருதி, வல்லரசுகள்கூட தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் சூழல் வரலாம். ஒரு ஏகாதிபத்திய வல்லரசு நாடு ஆதரிக்கிறது என்பதற்காக ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்காமல் இருக்கக் கூடாது என்று லெனின் சொன்னார்.

**தமிழீழத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தேச அரசை நிறுவி ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அந்த அரசையும், தமிழீழ மக்களையும் சிங்கள பௌத்த இனவெறி அரசு பல நாடுகளின் பங்களிப்போடு போர் நடத்தி - இரத்தக் களரியில் அழித்தொழித்தது. எனவே, பன்னாட்டுச் சமூகம்தான் ஐ.நா.வழியே அந்த அரசை மீட்டெடுத்துத் தர வேண்டும். அதற்கான கருத்து வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். அதற்குமுன், நமக்கு சில புரிதல்கள் வேண்டும்....**

அதுபோல், வட அமெரிக்கா ஆதரிக்கிறது என்பதற்காக ஒரு விடுதலைப் போராட்டத்தை, அமெரிக்கக் கையாட்களின் போராட்டம் என்று முத்திரை குத்திவிட முடியாது. குர்திஸ்தான் விடுதலைப் போராட்டம் அதுதான்.

ஈராக், துருக்கி போன்ற பல நாடுகளிடையே குர்து இன மக்கள் சிதறிக் கிடக்கின்றனர். துருக்கியில் ஓசலான் தலைமையில் பி.கே.கே. என்ற கொம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சி தேசிய இன விடுதலைப் போராட்டத்தை பல்லாண்டுகளாக – பல ஒடுக்குமுறைகளை எதிர்த்து முன்னேறிக் கொண்டுச் சென்றுள்ளது. ஓசலான் வாழ் நாள் சிறையாளியாக துருக்கியில் அடைக்கப்பட்டுள்ளார்.

1988இல் ஈராக்கில் சதாம் உசேன் அரசு, குர்து மக்களை இனப்படுகொலை செய்து, தொகை தொகையாகக் கொன்றபோது குர்து மக்களின் விடுதலைத் தாகம் பெருமளவில் பேசப்பட்டது. ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தபோது, குர்திஸ்தான் விடுதலை இயக்கத்தினர் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஒரு மாகாண அரசு ஏற்படுத்திக் கொள்வதற்கான சூழலாக அதை அமைத்துக் கொண்டார்கள்.

அதன் தலைவர் பர்சானி அப்போதே சொன்னார். எங்களுக்கு சாதகமான சூழல் வரும்போது எங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு இந்த மாகாண அரசைப் பயன்படுத்திக் கொள்வோம் என்றார். அதைத்தான் இப்போது 25.09.2017 இல் கருத்து வாக்கெடுப்பு நடத்தி – தங்கள் விடுதலைக் கோரிக்கையை உலகறியச் செய்துள்ளனர்.

விடுதலைக் கோரிக்கைக்காக ஆயுதம் தூக்கினால் அதை பயங்கரவாதம் என்கிறாயே, இதோ அங்கீகரிக்கப்பட்ட அரசைக் கொண்டு – சனநாயக வடிவிலேயே எங்கள் விடுதலைக் கோரிக்கையை – மக்கள் கருத்தாக நாங்கள் முன்வைக்கிறோம் என்று குர்து மக்களும், கட்டலோனிய மக்களும் தெரிவித்துள்ளார்கள்.

ஜேர்மனி மேலாதிக்கத்தில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம், கொசோவா விடுதலையை ஆதரிக்கிறது. ஆனால், கட்டலோனியா விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. அதுபோல்தான் பல வல்லரசுகளும்.

இதே சூழலில்தான், கனடாவில் கியூபெக் மாகாணத்திலும், ஐக்கிய முடியரசான பிரிட்டனில் ஸ்கொட்லாந்திலும் கருத்து வாக்கெடுப்புகள் சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. எந்த வல்லரசும் அதை முன்வைக்கவில்லை. அங்கிருக்கும் சனநாயக வளர்ச்சிக்கேற்ப, அதை அங்குள்ள பிரிட்ஷ் அரசும், கனடா அரசும்தான் நடத்தியது.

பல தேசிய இனங்கள் வாழக்கூடிய நாட்டில் கூட்டாட்சி (Federation அல்லது Confederation) என்பது தோற்றுப்போன ஒரு கோட்பாடு. கூடுதல் உரிமைகள் பெற்றெல்லாம் ஒரு தேசிய இனம் கூட்டாட்சியில் நிலைத்துவிட முடியாது. கூடுதல் அதிகாரத்தை நோக்கிப் போவதே இயல்பாக நடப்பதில்லை. தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் வலுவாகும் இடங்களில் அவற்றின் அழுத்தத்தில் அவற்றை எதிர்கொள்ள சில இடங்களில் நடக்கலாம்.

சோவியத் ஒன்றியத்தைவிட, தேசிய இனங்களுக்கு உரிமை வழங்கிய ஒரு அரசமைப்புச் சட்டம் உலகில் எங்காவது உண்டா? ஆனால், நடைமுறையில் ரசிய மொழி இன மேலாதிக்கம்தான் அங்கு நடந்தது.

தொடர்ச்சி 14ம் பக்கம்




# இந்தியாவின் சுயரூபத்தைப் புரிந்து கொண்ட குர்திஷ் தலைவர்

ஒரு தமிழ்ப் பெண்ணை மணம் முடித்திருந்த பொழுதும், தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் தவறான புரிதலைக் கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்கள் கொண்டிருந்தது எனக்கு அதிர்ச்சியை அளிப்பதாகவே இருந்தது.

அப்பொழுது ஜோன்-லுஸ் ரசீன் அவர்களிடம் நான் கேட்டேன்: 'உங்களின் துணைவியார் ஈழத்தமிழரா அல்லது தமிழ்நாட்டைச் சேர்ந்தவரா?'

'இரண்டுமே இல்லை. அவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்' என்றார் அவர்.

திடீரென நாம் நின்ற இடத்திற்கு அருகில் ஒரு சல சலப்பு.

திரும்பிப் பார்த்தோம். திவான் விடுதியை நோக்கி தனது உதவியாளர்கள், மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் மாலா பக்தியார் வந்து கொண்டிருந்தார். கூடவே சுலைமானி பல்கலைக் கழகத்தின் வேந்தர் றசா உசேனும்.

வழமைபோல் உணவருந்தியவாறு அறிமுகம் நடைபெற்றது. எனது முறை வந்த போது நான் ஒரு தமிழர் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தே என்னை கலாநிதி அடெல் பகவான் அறிமுகம் செய்து வைத்தார். உடனே மாலா பக்தியார் அவர்களின் புருவம் உயர்ந்தது. முகமும் மலர்ந்தது.

இவ்விடத்தில் மாலா பக்தியாரைப் பற்றிய ஒரு அறிமுகம் அவசியமானது.

குர்திஸ்தானின் ஆளும் கூட்டணிக் கட்சியான தேசப்பற்றுள்ள குர்திஸ்தான் ஒன்றியம் என்று தமிழில் பொருள்படும் பி.யூ.கே. கட்சியின் அரசியல்பீடத் தலைவர் என்ற வகையில் ஒரு அரசியல்வாதியாகவே மாலா பக்தியார் எமக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டாலும், அடிப்படையில் அவர் ஒரு சுதந்திரப் போராளி. குர்திஸ்தான் சுதந்திரப் போராட்டத்தில் காத்திரமான பங்கை வகித்த ஒருவர் அவர். ஒரு மார்க்சிய-லெனினியப் புரட்சிக்காரனாக 1970களின் தொடக்கத்தில் ஆரம்பமாகிய அவரது சுதந்திரப் போராட்டப் பயணம், அவரை ஈராக்கிய அரசாங்கத்தால் தேடப்படும் நபராக மாற்றியது.

**ஆனால் தமிழீழத்தைத் தங்கத் தட்டில் வைத்துத் தமிழர்களுக்கு இந்தியா வெகுமானமாக அளிக்கும் என்றெல்லாம் இன்றும் கூட எம்மவர்களில் பலர் அம்புலி மாமா கதை கூறிக் கொண்டிருக்கும் பொழுது, இந்தியா இடையூறு விளைவிக்கவில்லை என்றால் தமிழர்களுக்குத் தனிநாடு கிடைத்திருக்கும் என்று மாலா பக்தியார் கூறியது எனக்கு வியப்பாகவே இருந்தது.**

இதனைத் தொடர்ந்து பி.யூ.கே. கட்சியில் இணைந்து கொண்ட மாலா பக்தியார், கட்சியில் இணைந்து கொண்ட ஓரிரு ஆண்டுகளில், அதாவது 1976ஆம் ஆண்டில், கட்சியின் நிறைவேற்று அவையில் உறுப்பினராகினார்.

சதாம் உசேனின் ஆட்சிக் காலத்தில் குர்தி மக்களை இனவழிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு பி.யூ.கே. எடுத்த புரட்சிகர நடவடிக்கைகளிலும் மாலா பக்தியார் அவர்கள் காத்திரமான பங்கை வகித்திருந்தார்.

இவ்வாறு ஒரு அரசியல் போராளியாக ஏறத்தாள நாற்பத்தேழு ஆண்டுகளாக செயற்படும் மாலா பக்தியார் அவர்கள் ஒரு எழுத்தாளர். குர்தி மக்களின் வரலாறு பற்றியும், அவர்களின் சுதந்திரப் போராட்டம் பற்றியும், அவர்களின் நெடுநாள் அரசியல் அபிலாசைகள் பற்றியும் பல நூல்களை எழுதியவர் அவர். தவிர அவர் ஒரு ஊடகவியலாளரும் கூட.

இப்படிப்பட்ட ஒருவரை சந்திப்பது பெருமிதத்திற்குரியதாகவே இருந்தது.

ஆனாலும் ஒரு தமிழன் என்று நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுமே மாலா பக்தியார் அவர்களின் முகம் மலர்ந்தது எனக்கு வியப்பளிக்கவில்லை. குர்திஸ்தான் மண்ணில் கால்பதித்த கணத்தில் இருந்தே தமிழன் என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்ட எல்லா இடங்களிலும் எனக்குக் கிடைத்த மரியாதைதான் அதற்குக் காரணம்.

இப்பொழுது மாலா பக்தியார் பேசினார்: 'உலகெங்கும் சிதறுண்டு கிடக்கும் இனங்களில் குர்தியர்களும், தமிழர்களும், உஸ்பெக்கிஸ்யர்களுமே அதிக அளவில் அடக்குமுறைகளுக்கு ஆளாகும் இனங்களாக உள்ளார்கள்.'

அவர் கூறியதை நான் நிராகரிக்கவில்லை. நிராகரிக்கவும் முடியவில்லை.

அப்பொழுது மாலா பக்தியார் மீண்டும் பேசினார்: 'தமிழர்களின் போராட்டத்திற்குத் தடையாக இருப்பது இந்தியா. இந்தியா இடையூறு விளைவிக்கவில்லை என்றால் தமிழர்களுக்குத் தனிநாடு கிடைத்திருக்கும்.'

மாலா பக்தியார் இவ்வாறு கூறிய பொழுது எனக்கு வியப்பாக இருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழத் தனியரசு உருவாகுவதற்கும் இடையூறாக இருப்பது இந்தியா தான் என்பது உலகறிந்த உண்மை. உலகறிந்த இந்த உண்மையை ஏறத்தாள ஐந்து தசாப்த கால போராட்ட வரலாற்றைக் கொண்டிருந்த மாலா பக்தியார் அவர்கள் அறிந்திருந்தது எனக்கு வியப்பை அளிக்கவில்லை. ஆனால் தமிழீழத்தைத் தங்கத் தட்டில் வைத்துத் தமிழர்களுக்கு இந்தியா வெகுமானமாக அளிக்கும் என்றெல்லாம் இன்றும் கூட எம்மவர்களில் பலர் அம்புலி மாமா கதை கூறிக் கொண்டிருக்கும் பொழுது, 'இந்தியா இடையூறு விளைவிக்கவில்லை என்றால் தமிழர்களுக்குத் தனிநாடு கிடைத்திருக்கும்' என்று மாலா பக்தியார் கூறியது எனக்கு வியப்பாகவே இருந்தது. உலகின் எங்கோ ஒரு மூலையில், தனது மக்களின் விடிவிற்காகத் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்து செயற்படும் ஒரு மூத்த குர்தி அரசியல் போராளிக்கு இருக்கும் புரிதல் கூட எம்மவர்களில் பலருக்கு இல்லை என்பதே எனது வியப்புக்குக் காரணம்.

ஒரு இந்தியத் தமிழ்ப் பெண்ணை மணம் முடித்தவர் என்ற வகையில், இதற்கு கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்களின் பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கின்றது என்று நாடி பிடித்துப் பார்க்கும் நிமித்தம் அவரின் பக்கம் திரும்பினேன். ஒன்றுமறியாத முனிவர் போல் அவர் மௌனமாக இருந்தார்.

அப்பொழுது எனது எதிர்ப்புறம் அமர்ந்திருந்த திரு பக்மான் நெரிமான் என்ற அரசறிவியலாளர் பேசினார். அன்று மதியம் சுலைமானி பல்கலைக் கழகத்தில் எனக்கும் கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்களுக்கும் இடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து சூடான கருத்துப் பகிர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் எனது அருகில் அமர்ந்திருந்து நான் கூறுவதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் நெரிமான்.

என்னிடம் நெரிமான் கேட்டார்: 'குர்திஸ்தானைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? எங்கள் நாடு பற்றி உங்கள் பார்வை எப்படி உள்ளது?'

அப்பொழுது எனது மனதில் ஒரு பொறி தட்டியது.

தொடர்ச்சி 14ம் பக்கம்


மாலா பக்தியார்
photo by : karwan kaki

# கட்டலோனியா, குர்திஸ்தான்...

ஒரே கட்சி, ஒரே சித்தாந்தம் என்ற வழியில் அது நடந்தது. வட அமெரிக்காவில் பெரும்பாலும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களின் ஆங்கிலோ சாக்சன் மொழியினரின் கூட்டாட்சியாக அது இருந்தாலும் கூட, அங்கும் முரண்பாடுகள் வெடிக்கின்றன. கலிபோர்னியாவில் தனி நாட்டுக் குரல் கேட்கிறது. பல தேசிய இனங்களின் கூட்டாட்சி அரசில், ஏதாவதொரு தேசிய இனம் மேலாதிக்கம் செலுத்துவது இயல்பாக உள்ளது.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி சன்னி பிரிவு முஸ்லீம்கள் ஆட்சியாகத்தான் நடந்தது. குர்திஸ்தானில், சன்னி இசுலாமியப் பிரிவினரே பெரும்பான்மையாக உள்ளனர். கட்டலோனியாவில் ரோமன் கிருத்தவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். ஸ்பெயினிலும் அவ்வாறே! இருப்பினும், அங்கெல்லாம் மதத்தைத் தாண்டி மொழி வழி தேசிய இனப் போராட்டம் நடக்கிறது. பண்பாட்டுக் கூறாக மதம் இருக்கலாமே தவிர, மொழி – தாயகம் தான் தேசிய இனத்தின் அடித்தளமாக இருக்கின்றன. இவையே விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையாக உள்ளன. சில அரிதான சூழல்களில், நாகாலாந்து போன்ற இடங்களில் பல மொழி பேசுபவர்கள் வரலாற்றுத் தாயகம் என்ற அடிப்படையில், ஒரு தேசிய இனமாக ஒருங்கிணைந்து கொண்டு, தங்களுக்கான தேச அரசை அமைத்துக்கொள்ளப் போராடுவதும் நடக்கிறது. இது சராசரிப் போக்கல்ல!

தமிழீழத்தில் இன்றைக்குள்ள நிலையில், விடுதலைக் கோரிக்கையை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பதில் அங்கு அமைப்பு ரீதியான சில குழப்பங்கள் உண்டு.

தமிழீழத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தேச அரசை நிறுவி ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அந்த அரசையும், தமிழீழ மக்களையும் சிங்கள பௌத்த இனவெறி அரசு பல நாடுகளின் பங்களிப்போடு போர் நடத்தி – இரத்தக் களரியில் அழித்தொழித்தது.

**முதல் கட்டமாக ஒத்த தேசிய இனங்கள் என்ற வகையில் தமிழர்கள் தங்கள் இறையாண்மை இலட்சிய அடிப்படையில் ஒன்று சேர வேண்டும்.**

எனவே, பன்னாட்டுச் சமூகம்தான் ஐ.நா.வழியே அந்த அரசை மீட்டெடுத்துத் தர வேண்டும். அதற்கான கருத்து வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்கவேண்டும். அதற்குமுன், நமக்கு சில புரிதல்கள் வேண்டும்.

இந்தியாவின் அனுசரணையோடு – இந்தியாவின் ஆதரவைப்பெற்றுக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்நகர்த்தவே முடியாது என்ற அடிப்படைப் புரிதல் நமக்கு வேண்டும். எந்தவொரு அரசுக்கும் வர்க்கத்தன்மை இருப்பதைப்போல், அவற்றுக்கு ஒரு இனத்தன்மையும் இருக்கிறது. அவ்வாறு, இந்தியாவுக்கு ஒரு ஆரிய இனத் தன்மை இருக்கிறது. ஆரியக்கட்டமைப்பாக அது செயல்படுகிறது.

ஆண்டாண்டு காலமாக ஆரியத்திற்கு எதிராக நிற்கும் தமிழினத்தை பகையாக நிறுத்தியே, இந்தியா பிறந்து வளர்ந்து நம்முன் நிற்கிறது என்ற புரிதல் நமக்கு அவசியமானது.

உலகின் புவிசார் அரசியல் நிலைமைகள் அவ்வப்போது மாறலாம். சோவியத் – அமெரிக்கா என்ற இருமுனை உலகம் இருந்தபோது, உலக நிலைமைகள் வேறு. இன்றைக்கு, வட அமெரிக்கா தலைமையில் ஒருமுனை உலகம் வலிந்து திணிக்கப்படும் சூழலில், அதற்கு எதிராகப் பலமுனை உலகம் உருவாகி வரும் சூழல் வேறு. எனவே, புவிசார் அரசியல் நலன் என்பது தற்காலிகமானது.

இன்னொருபக்கம், சீன எதிர்ப்புக்காக இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லும் கருத்தாளர்கள் இருக்கின்றனர். இந்தியா ஒருபோதும் அவ்வாறு செய்யாது. தமிழினப் பகையோடுதான், இந்திய அரசு சீன எதிர்ப்பை முன்வைக்கும். அவ்வாறுதான் செயல்படுகிறது. தனது பிம்ஸ்டெக் (BIMS-TEC) கூட்டமைப்பிலும், சாகர் மாலா திட்டத்திலும் சீனாவோடு கைகோக்கிறது. பன்னாட்டு உறவு வெறும் கருப்பு வெள்ளையாக இல்லை. எனவே, இந்தியா – தமிழினப் பகை அரசு என்ற புரிதலோடுதான் – தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அரசியல் அணி வகுப்பை நாம் முன்வைக்க வேண்டும். தமிழீழத்தில் கருத்து வாக்கெடுப்பு நடத்த வழக்கம்போல் சிங்கள அரசு எதிர்க்கும். எனவே, அதற்கு ஆதரவாக வெளியில்தான் சூழல்களை உருவாக வேண்டும். அப்பணியில் நாம் ஈடு பட வேண்டும்.

இன்றைக்கு, பல தடைகளைக் கடந்து தமிழீழத்தில் மாவீரர் நாள் எழுச்சியோடு கடைபிடிக்கப்படுகிறது. ஏனெனில், மாவீரர் நாள் என்பது துக்கம் கொண்டாடும் நிகழ்வல்ல. நாங்கள் ஒரு தேசம். இது எங்கள் தேச விடுதலைப் போராட்டத்தில் எதிரியால் கொல்லப்பட்டவர்களின் நினைவு நாள் என்று உலகிற்குத் தங்கள் விடுதலைக் கோரிக்கையை பறைசாற்றும் நிகழ்வு. இவ்வாறான சூழலில், தமிழீழத்தில் கருத்து வாக்கெடுப்பு நடத்த விரும்பினால், அதற்கு மிகப்பெரிய தடையாக இந்தியாதான் முன் நிற்கிறது.

நாமெல்லாம் நேசித்த கியூபா, வெனிசுவேலா போன்ற பல இடதுசாரி நாடுகள், இந்தியாவின் உதவி வேண்டும் என்பதற்காகத்தான், கேள்வி இல்லாமல் இந்தியா ஆதரித்த இலங்கையின் தமிழின அழிப்புப் போரை ஆதரித்தார்கள். இதில் முதலாளிய நாடு – பொதுவுடைமை நாடு என்ற சித்தாந்த வேறுபாடுகள் கிடையாது.

இன்றைக்குள்ள உலகச் சூழலில், தேசிய விடுதலைப் போராட்டம் என்பது, வல்லரசுப் போட்டிகளுக்கு உள்ளே நுழைந்து நடத்தும் ஒரு காய் நகர்த்தல் ஆகும். வெறும் கொள்கை உறவோடு, ஞாயங்களின் அடிப்படையில் அது நடக்காது. மனித உரிமை ஆர்வலர்கள் இருப்பார்கள், மக்கள் இருப்பார்கள். ஆனால், அரசு என்பது ஒரு போதும் ஞாயத்தின் பக்கம் நிற்காது. தங்கள் அரசுக்கு அல்லது தங்கள் மண்டலத்திற்கு ஒரு நலன் இருக்கிறதென்றால், ஒரு தேச விடுதலைப் போரை ஆதரிக்கும் நிலை ஏற்படலாம்.

இன்னொரு கருத்தை முன் வைக்கின்றனர். கட்டலோனியா மற்றும் குர்திஸ்தானில், மாகாண அரசுதான் கருத்து வாக்கெடுப்பை நடத்தியது. எனவே, இங்கேயும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் பதவியைப் பிடித்த பிறகு அவ்வாறு கருத்து வாக்கெடுப்பு நடத்துவோம் என்று சிலர் கூறுகின்றனர். அதற்கு வாய்ப்பில்லை.

ஒரு சாதாரண பஞ்சாயத்துத் தேர்தலில், வேட்புமனுத் தாக்கல் செய்வதற்குக் கூட இந்திய ஒருமைப்பாட்டை – இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று ஒருவர் வாக்குறுதி அளித்தால் தான், இங்கு தேர்தலிலேயே நிற்க முடியும். இந்திய அரசமைப்புச் சட்டம், தேர்தல் முறை ஆகியவை அத்தகையவை. கருத்து வாக்கெடுப்பு என்று அறிவித்தால் அடுத்த நொடி தமிழ்நாட்டு ஆட்சியை இந்திய அரசு கலைத்துவிடும். அடைந்தால் திராவிட நாடு என முழங்கியவர்கள் கூட, ஏதோவொரு வடிவத்தில் விடுதலைக் கோரிக்கையை முன்வைத்தபோது, தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். தி.மு.க.வுக்கு அப்போது கூடுதல் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கிடைத்தனர். ஆனால், இந்திய அரசு ஒரு தடைச்சட்டம் போட்டு அதை கைவிடச் செய்தது.

தனிநாடு கேட்டவர்கள் ஆயிற்றே என தமிழ் நாட்டுக்குக் கூடுதல் உரிமைகள் எல்லாம் கொடுக்கப்படவில்லை. கூடுதலாக அதிகாரங்கள்தான் பறிக்கப்பட்டன. மாநில உரிமைகள் பல பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டன. அவ்வாறுதான், தமிழ்நாட்டின் கல்வி உரிமைப் பறிக்கப்பட்டு இந்திய அரசால் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டது.

இந்திய நாடாளுமன்றம்தான் தேசிய இன ஒடுக்குமுறையின் முதன்மைக் கருவியாக இருக்கிறது. சனநாயகம் என்ற போர்வையில் ஆரியமய இந்தி இனத்தின் ஆதிக்கம், ஆரிய வளையத்தில் வீழ்ந்துபோன பிற இனங்களின் துணையோடு நடக்கிறது. நாடாளுமன்றப் பெரும்பான்மை என்பது அதுதான்.

எல்லா வகையிலும் அதிகாரத்தை மையப்படுத்துவதென்பது வெறும் சட்டப்பிரச்சினை அல்ல. சமற்கிருத இந்தி மொழித் திணிப்பும், மாநில உரிமைகள் பறிப்பும் ஆரிய இன மேலாதிக்கத்திற்காக நடக்கின்றன. மோடி இதில் வேகமாக உள்ளார் என்றால், காங்கிரசு அதில் கொஞ்சம் பதமாக நடக்கிறது. அடிப்படையில் இருவருக்கும் வேறுபாடில்லை. சிலர், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்று கூறுகின்றனர். அது உயர்ந்த இலட்சியம்தான் என்றாலும், அதற்கு உடனடி வாய்ப்பில்லை!

எனவே, முதல் கட்டமாக ஒத்த தேசிய இனங்கள் என்ற வகையில் தமிழர்கள் தங்கள் இறையாண்மை இலட்சிய அடிப்படையில் ஒன்று சேர வேண்டும். தமிழர்களின் தேசியத் தாயகங்களான தமிழீழமும் தமிழ்நாடும் தமிழர் சர்வதேசியம் என்ற வகையில், பொதுப் புரிதலோடு ஒத்திசைய வேண்டும்.

அதன் வழியிலேயே, தமிழீழத்துக்கான கருத்து வாக்கெடுப்பு நோக்கி நாம் நகர முடியும். தமிழீழம் இன்றைக்கு எலும்புக் கூடாக இருக்கலாம். சாம்பல் மேடாக இருக்கலாம். ஆனால், நாளை எழும்!

சாம்பலிலிருந்து மீண்டும் எழும்!

மாவீரர்களின் ஈகம் வீண் போகாது!

தமிழீழம் உறுதியாய் வெல்லும்.

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

### பெருநிறுவனங்களை உருவாக்குவதில் சீனா முன்னணியில்

கடந்த 10 ஆண்டுகளில் பெரும் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதில் இந்தியாவைவிட சீனா முன்னணியில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. டென்சன்ட், அலிபாபா, பைட் மற்றும் சியோமி போன்ற பிரம்மாண்டமான சீன நிறுவனங்கள் அண்மைக்காலத்தில் உருவாகியிருப்பதை சுட்டிக்காட்டும் அந்த ஆய்வு, மானியம் குறைவான ஊதியம், அமைப்பு ரீதியான சீரமைப்பு, அந்நிய முதலீடு போன்றவையே இத்தகைய வளர்ச்சிக்கு காரணம் என்று தெரிவித்



துள்ளது. அதிலும் அண்மைக்காலமாக சீனாவில் இணையதளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து இருப்பதன் மூலம், அந்நாட்டு மக்களின் பெரும்பாலானோர் முறைபடுத்தப்பட்ட பொருளாதார நடைமுறை வளையத்திற்குள் வந்திருப்பதாக அந்த ஆய்வு கூறியுள்ளது. 2013ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டுக்குள் சீனாவில் இணையதளத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 71 வீதமாக அதிகரித்துள்ளது என்றும், இந்தியாவில் 21 வீதம் என்ற அளவில் தான் உள்ளது என்றும் மற்றொரு ஒப்பிட்டு ஆய்வு தெரிவிக்கின்றது.

### உலகில் அதிக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எங்குள்ளன?

உலக நாடுகளில் அதிக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எந்த நாட்டில் இருக்கின்றன. அமெரிக்கா மற்றும் சீனாவில் தலா ஒரு இலட்சம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக 60,799 எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. இதேவேளை, ஏனைய வளர்ச்சி அடைந்த நாடுகளில் மின்சார வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை மெதுமெதுவாக வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை, நீண்ட காலமாக எரிபொருள் தேவையில் மக்கள் நுகர்வில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்து, 3ம் இடத்தை ஜப்பான் தக்கவைத்திருந்தது. எனினும், 2015ல் ஜப்பான் இடத்தை இந்தியா பிடித்துவிட்டது.




### சர்வதேச நீதிமன்றத்தில் தமிழக அரசு மீது வழக்கு நிஸான் நிறுவனம் எச்சரிக்கை

ஜப்பானைச் சேர்ந்த பிரபல கார் நிறுவனமான நிஸான், மற்றொரு புகழ்பெற்ற ரெனால்ட் நிறுவனத்துடன் இணைந்து சென்னையில் கார் உற்பத்தி தொழிற்சாலையை 2008ம் ஆண்டு 6 ஆயிரத்து 100 கோடி ரூபா (இந்திய) முதலீட்டில் தொடங்கியது. அப்போது செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழக அரசு சார்பில் ஊக்கத்தொகை மற்றும் வரிச்சலுகைகளை தருவதாக நிஸான் நிறுவனம் தெரிவித்தது. ஆனால், ஒப்புக்கொண்டபடி 5 ஆயிரம் கோடி ரூபா வரியை திரும்பித் தர தமிழக அரசு மறுப்பதாகவும் நிஸான் நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும் இதுதொடர்பாக ஏற்கனவே 2 ஆயிரத்து 900 கோடி ரூபா நிலுவை வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய அரசிடம் பலமுறை முறையிட்டும் பலனில்லை என்பதால் தற்போது இந்திய அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்போவதாகவும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிஸான் நிறுவனம் கடிதம் அனுப்பியுள்ளது.

ஒரு கதை

## அபசகுனம்

அக்பர் தினமும் தூங்கி எழுந்தவுடன் அவர் எதிரில் உள்ள வினாயகர் படத்தை தான் பார்ப்பார். ஒரு நாள் அவர் கண் விழிக்கும் போது சிப்பாய் ஒருவர் வந்து விட்டார். அன்று முழுவதும் அக்பருக்கு பல பிரச்சனைகள் வந்தது. எல்லாம் அந்த சிப்பாய் முகத்தில் விழித்ததால் தான் என்று அந்த சிப்பாயை தூக்கில் போட உத்தரவிட்டார்.

இந்த விடயம் பீர்பாலுக்கு தெரிய வந்தது. பீர்பால் மன்னரிடம் ஏன் அவரை தூக்கிலிடப்போகிறீர் என்று கோபமாக கேட்டார்.



அதற்கு அக்பர் இவனுடைய முகத்தில் விழித்ததால் எனக்கு ஏகப்பட்ட பிரச்சனைகள் வந்தது, இவனுடைய முகம் அபசகுனமானது என்று கூறினார்.

அதற்கு பீர்பால் பயங்கரமாக சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறாய்...?" என்று அக்பர் கோபமாக பீர்பாலை பார்த்து கேட்டார்.

அதற்கு பீர்பால் "நீங்கள் அவனுடைய முகத்தில் விழித்ததால் உங்களுக்கு பிரச்சனைகள் மட்டும் தான் வந்தது. ஆனால் அவன் உங்கள் முகத்தில் விழித்ததால் அவனுக்கு உயிரே போகப்போகிறதே , அப்போ யாருடைய முகம் அபசகுனமானது என்று நினைத்து சிரித்தேன்..." என்றார்.

அக்பர் தன் தவறை உணர்ந்து அந்த சிப்பாயை விடுதலை செய்தார்.

ஒரு விதை

## கைதடியின் தடுப்பு வேலிகள்



**கப்டன் இளமுகி**
(மயில்வாகனம் சசிதரன் )
செமமடு - வவுனியா
மண்ணில் 21.08.1981
மண்ணிற்குள் 22.12.2000

யாழ். மாவட்டத்தில் கைதடி நோக்கி முன்னகர்ந்த சிறீலங்கா இராணுவத்திரை தடுத்து நிறுத்தும் போரில் 22.12.2000 அன்று கப்டன் இளமுகி (மயில்வாகனம் சசிதரன் செமமடு – வவுனியா) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருடன், மேஜர் சீத்தா (சோமசுந்தரம் ஜீவபோதினி – நல்லூர் பூநகரி கிளிநொச்சி), கப்டன் இளங்கதிர் (இராசசுந்தரம் கமலதாசன் – கொழும்பு சிறீலங்கா), கப்டன் சிறைவாசன் (பத்மநாதன் செந்தில்குமார் – உடுவில் யாழ்ப்பாணம்), கப்டன் கலையரசன் (சுப்பிரமணியம் விமலேஸ்வரன் – சாவகச்சேரி யாழ்ப்பாணம்), லெப். பிரசாந்தி (சிவயோகராசா சிவமாலினி – கச்சாய் தெற்கு யாழ்ப்பாணம்), வீரவேங்கை வெண்ணிலா (தியாகராசா தெய்வகாந்தி – புதியபுன்னைநிராவியடி முல்லைத்தீவு), வீரவேங்கை இன்பரசி (மதியாபரணம் ஜெயகலா – முத்தயன்கட்டு முல்லைத்தீவு), மேஜர் மெய்யறிவு (வல்லிபுரம் சிறீதரன் – அரசர் கேணி பளை கிளிநொச்சி), வீரவேங்கை எழிலிசை (சின்னையா ஜெயதீஸ்வரி – செம்மலை அளம்பில் முல்லைத்தீவு), வீரவேங்கை மாவரசி (ஆறுமுகம் பவளராணி – அல்வாய் வடக்கு யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டடிருந்தனர்.

ஒரு குறள்

**அறத்துப்பால் – அடக்கமுடைமை**



செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்.

**அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிந்து அதற்கேற்ப அடக்கத்துடன் நடந்து கொள்பவரின் பண்பை உணர்ந்து பாராட்டுகள் குவியும்.**

ஒரு மருத்துவம்

## நீரிழிவு நோயை விரட்டும் வெண்டைக்காய் நீர்!

நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உலகில் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்துவிட்டால், அதற்கு வாழ்நாள் முழுவதும் ஊசியை எடுத்து வர வேண்டியிருக்கும். மேலும் ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்துவிட்டால், அதனால் வேறுசில உடல்நல பிரச்சனைகளும் தானாக உடலின் மேல் படையெடுக்க ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட நீரிழிவு நோயை ஆரம்பத்திலேயே குணப்படுத்தக் கூடிய இயற்கையான மருந்து ஒன்று உள்ளது. இந்த அருமருந்தைப் பற்றியும், அதன் தயாரிப்பு முறையை பற்றியும் இப்போது பார்ப்போமா...



நீரிழிவு நோய்க்கான இயற்கை மருந்து வேறொன்றும் இல்லை, இரவில் படுக்கும் முன் ஒரு டம்ளர் நீரில் 2 துண்டுகள் வெண்டைக்காயைப் போட்டு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் எழுந்ததும் காலை உணவு உண்பதற்கு அரை மணிநேரத்திற் முன் வெறும் வயிற்றில் பருக வேண்டும். நீரிழிவு நோய் வகைகளான ரைப் 1, ரைப் 2 மற்றும் கர்ப்பகால நீரிழிவு போன்றவற்றை சரிசெய்து, இரத்தத்தில் குளுக்கோசின் அளவை சீராகப் பராமரிப்பதற்கு வெண்டைக்காய் தண்ணீர் உதவுவதாக, பலர் அனுபவத்தில் கூறியுள்ளனர். வெண்டைக்காய்க்கும், சர்க்கரை நோய்க்கும் உள்ள தொடர்பு குறித்து மருத்துவ ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வில் நீரிழிவுடன் கர்ப்பமாக இருக்கும் எலிக்கு வெண்டைக்காய் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. ஒரு கட்டத்தில் அந்த எலியின் இரத்த குளுக்கோசின் அளவு சீராக இருந்தது தெரியவந்தது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு தகவல்

## உலகின் உயர்ந்த ஏரி

உலகத்திலேயே மிக உயரமான ஏரி தென் அமெரிக்காவில் அமைந்துள்ளது. அந்தீசு மலைத்தொடரின் என்டோர்கிக் அல்டிபிலனோ (Endorheic Altiplano) பகுதியின் வடமுனைவு பிரதேசத்தில் மலையில் அமைந்துள்ள 'டிட்டிகாகா (Titicaca)' ஏரிதான் அது.



கடல் மட்டத்தில் இருந்து 3812 மீற்றர் உயரத்தில் இருக்கிறது. டிட்டிகாகா ஏரி இரண்டு நாடுகளுக்கு சொந்தமானது. பெரு நாட்டில் ஏரியின் பெரும் பகுதி அமைந்துள்ளது. பொலிவிய நாட்டில் ஏரியின் சிறிய பகுதி அமைந்துள்ளது. இந்த ஏரி அதிக நீளம் கொண்டது. 190 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏரியின் அகலம் 80 கிலோ மீற்றர் ஆகும். அத்துடன், 281 மீற்றர் ஆகக் கூடிய ஆழத்தையும் கொண்டது. 8372 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ளது. டிட்டிகாகா 44 தீவுகைள கொண்டுள்ளதுடன், அவற்றில் சில தீவுகள் அடர்த்தியான சனத்தொகையைக் கொண்டுள்ளது.

இதில் 27 ஆறுகள் வந்து கலக்கின்றன. ஆனால் இதிலிருந்து டேஸ்கவடேரா என்ற ஒரே ஒரு ஆறு மட்டும் புறப்படுகிறது. பூமத்திய ரேகைக்கு மிக சமீபமாக இந்த ஏரி அமைந்திருந்தாலும்,

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

**நண்பர்களைப் பாராட்ட வேண்டியிருந்தால் பலர் முன் பாராட்டுங்கள்.**

– சைரஸ்

ஒரு பழமொழி

**மற்றவர்களை அறிந்தவன் படித்தவன்.**
**தன்னை அறிந்தவன் அறிவாளி**

- சீனா

ஒரு வரலாறு

## மரணத் தருவாயில் அலெக்ஸாண்டர் கூறியது

மரணத் தருவாயில் அலெக்ஸாண்டர் தனது தளபதிகளை அழைத்து தனது இறுதி ஆசையாக மூன்று விருப்பங்களைக் கூறுகிறார்.

1. என்னுடைய சவப்பெட்டியை தலை சிறந்த மருத்துவர்கள்தான் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும்!

2. நான் இதுவரை சேர்த்த பணம், தங்கம், விலை உயர்ந்த கற்கள் போன்றவைகளை என்னுடைய இறுதி ஊர்வலத்தின் பாதையில் தூவிக்கொண்டு செல்ல வேண்டும்!

3. என் கைகளை சவப்பெட்டியின் வெளியில் தொங்கிக்கொண்டு வரும்படி செய்ய வேண்டும்.!

தளபதிகளில் ஒருவர் அலெக்ஸாண்டரின் அசாதாரண விருப்பத்தால் மிகவும் ஆச்சரியப்பட்டு அதனை விவரிக்கும்படி கேட்டார். அதற்கு அலெக்ஸாண்டரின் பதில்கள்தான் மிகவும் முக்கியமானவை.

தலைசிறந்த மருத்துவர்களால்கூட என்னை நோயிலிருந்து காப்பாற்ற முடியாது, சாவை தடுக்க முடியாது என்பதை உலகத்திற்கு தெரியப்படுத்துவதற்காக!



நான் இந்த பூமியில் சேகரித்த, கைப்பற்றிய பொருட்கள் பூமிக்கே சொந்தமானவை என்பதை தெரியப் படுத்துவதற்காக.

எனது கைகள் காற்றில் அசையும்போது, மக்கள் வெறும் கையுடன் வந்த நான் வெறும் கையுடன் போவதை உணர்ந்து கொள்வார்கள்.

ஒரு பழமொழியும் விளக்கமும்

## ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்

'அகத்தில் போட்டாலும் அறிந்து போடவேண்டும்' என்ற பழமொழியே திரிபடைந்து 'ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்' என்று வந்துவிட்டது. இப் பழமொழியில் வரும் 'ஆத்துல' என்னும் கொச்சைச் சொல்லின் தூய தமிழ்வடிவம் 'அகத்தில்' என்பதாகும். அகம் என்ற சொல்லிற்குப் பல பொருட்கள் உண்டெனினும் இப் பழமொழியில் வரும் பொருள் 'மனம் அல்லது நினைவு' என்பதாகும். அகத்தில் போடுதல் என்பது நினைவில் வைத்தலாகும். 'அளந்து' என்ற சொல்லில் எழுத்துப் பிழை உள்ளது. இது 'அறிந்து' என்று வரவேண்டும்.



புதுப்புது கருத்துக்களை நினைவில் கொள்ளும் முறை குறித்து இயற்றப்பட்டதே இப் பழமொழி ஆகும். மனித வாழ்க்கையில் புதிய கருத்துக்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இவற்றை நினைவில் கொள்ளும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இல்லையேல் பலப்பல கேடுகளைச் சந்திக்க நேரிடும். சான்றாக ஒரு மாணவன் கல்வி கற்பதை எடுத்துக் கொள்வோம். கல்வி கற்கும்போது ஆசிரியர் நாள்தோறும் புதுப்புது தகவல்களை மாணவனுக்குக் கூறுகிறார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

NOUVEAU
புதியதோர் உதயம்

# Indian Taste


பாரீஸ் லாச்சப்பலில் ஒரு
# ஆப்பக்கடை

SPÉCIALITÉS
CURRY | TANDOORI | APPAM

OUVERT 7J/7

54 RUE LOUIS BLANC 75010 PARIS

01 42 05 50 50   indiantastefrance@gmail.com




**CAFÉ BHARATH**
67 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 58 20 06 20

**BHARATH**
51 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 42 09 35 84

**COFFEE BHARATH**
13 RUE DES FRÈRES LUMIÈRE
92110 CLICHY
TÉL : 01 47 37 91 41

# பிரான்சின் 'தேசத்தின் பாடகர்' ஓய்ந்தது ஓர் இசைக்குரல்

பிரான்சின் புகழ்பெற்ற பாடகர் Johnny Hallyday நுரையீரல் புற்றுநோயினால் கடந்த 6ம் திகதி புதன்கிழமை அதிகாலை தனது 74 வது வயதில் உயிரிழந்துள்ளார். 1943ம் ஆண்டு யூன் மாதம் 15ம் திகதி பரிசில் பிறந்த இவர், கடந்த சில வருடங்களாக நுரையீரல் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் Marnes-la-Coquette இல் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில் கடந்த புதன்கிழமை தன் விழிகளை அவர் மூடியிருக்கின்றார்.



பல இலட்சம் இரசிகர்களை தன்வசப்படுத்தியிருந்த, தேசத்தின் பாடகர் என அழைக்கப்படும் இந்த இசை மேதையின் பிரிவு பிரெஞ்சு மக்கள் அனைவரையும் மிகவும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. 50 ஆண்டுகாலமாக மிகச் சிறந்த பாடகராகவும், பல சாதனைகளையும் கொண்டிருந்தார். 40க்கும் மேற்பட்ட இசைத்தட்டுக்



களை வெளியிட்டும், அவை 110 மில்லியன்களுக்கு மேல் விற்பனை செய்தும் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

மறைந்த தேசத்தின் பாடகருக்கு பிரான்ஸ் நாடாளு



மன்றம் விசேடமாகக்கூடி தனது அஞ்சலியை செலுத்தியது. அத்துடன், கடந்த 9ம் திகதி சனிக்கிழமை சோம்ப்ஸ் எலிசேயில் மாபெரும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. முன்னதாக வெள்ளிக்கிழமை முதல் ஈஃபிள் கோபுரத்தில் Merci Johnny (நன்றி ஜொனி) என எழுத்துக்கள் திரையிடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாட்களுக்கு இந்த வார்த்தைகள் ஒளிரவிடப்பட்டிருந்தன.

இதேவேளை, சனிக்கிழமை சோம்ப்ஸ் எலிசேயில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வு ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் தலைமையில் இடம்பெற்றது. உடலம் பரிசின் La Madeleine தேவாலயத்துக்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் முதல் பெண்மணி பிரிஜித் மக்ரோன் கலந்துகொண்டிருந்தார்.

பின்னர் பல நூறு உந்துருளி சாரதிகள் தங்கள் உந்துருளியில் ஊர்வலம் வர, உடலம் சோம்ப்ஸ் எலிசேக்கு கொண்டுவரப்பட்டது.

இறுதி நிகழ்வில் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் தெரிவிக்கும் போது, Johnny Hallyday இன்றியமையாத ஒரு தோழன். நண்பனாக, சகோதரனாக ஜொனி உங்கள் எல்லோர் வீட்டிலும் உள்ளார். ஜொனி உங்களுடையவர். அவர் ஒரு போதும் மறையமாட்டார். அவர் இந்த நாட்டின் ஒரு பகுதி! என மக்ரோன் மிக உருக்கமாக தெரிவித்தார்.

உடலத்தை தேவாலயத்தில் இருந்து எடுத்துவரும் போது ஜொனி இன் மனைவி மற்றும் அவரின் வியட்நாமில் இருந்து தத்தெடுத்து வளர்க்கப்படும் இரு பிள்ளைகளும் பின்னால் நடந்து வந்தனர். தேவாலத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வின் போது, முன்னாள் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலண்ட் மற்றும் நிக்கோலா சார்க்கோசி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தேவாலயத்தின் இரு பகுதிகளிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் குவிந்திருந்தனர். செய்தி சேகரிப்பாளர்கள், நிழற்படக்கலைஞர்கள் உள்ளிட்ட பலர் அஞ்சலி இடம்பெற்ற இடத்தில் குவிந்திருந்தனர்.

தொடர்ந்து 11ம் திகதி திங்கட்கிழமை பிரெஞ்சு தீவான Saint-Barthélemy இல் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாடகர் ஜொனிக்கு மிகவும் பிடித்தமான இடமாகவும், அடிக்கடி சென்று வர விரும்பும் இடமாகவும் இது இருப்பதால் அவரது வித்துடலை நல்லடக்கம் செய்ய இத்தீவினை தாம் தேர்ந்தெடுத்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். இத் தீவில் இவ்வருட கோடை காலத்தில் கூட அவர் ஓய்வெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## 10ல் ஒன்று போலி மருந்து உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

வறிய மற்றும் நடுத்தர வருவாய் உள்ள நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள நாடுகளில் விற்பனை செய்யப்படும் மருந்துகளில் 10ல் ஒன்று போலியானவை என உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களின் நோய்களை தீர்க்க உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மாத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. வல்லரசு மற்றும் வளர்ந்த நாடுகளில் தயாரிக்கப்படும் இவை வறிய மற்றும் நடுத்தர வருவாய் உள்ள நாடுகளில் பெருமளவில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்வாறு விற்பனை செய்யப்படும் மருந்து மாத்திரைகளில் 10 சதவீதம் போலியானவை அல்லது நம்பகத்தன்மை இல்லாதவை என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் சார்பில் சர்வதேச கண்காணிப்பு மற்றும் பரிசோதனை முறை 2013ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது சர்வதேச அளவில் 3 கட்டமாக ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்தது. அப்போது 1500 தயாரிப்புகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முடிவில்



வறிய மற்றும் நடுத்தர வருவாய் நாடுகளின் பல கோடி டொலர் மதிப்பிலான போலி மருந்துகள் விற்கப்படுவது கண்டுடிக்கப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மலேரியா மற்றும் அன்டிபயோடிக் எனும் நோய் எதிர்ப்பு சக்திக்கான மாத்திரையிலேயே போலிகள் அதிகம் இருப்பதாகவும் உலக சுகாதார நிறுவன ஆய்வு கூறியுள்ளது. இதன்மூலம் பொதுமக்களின் உயிர் பறிபோகும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சீனர்களுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு

அமெரிக்காவின் முன்னணி நிறுவனங்களின் கணினி சேமிப்பகங்களில் ஊடுருவி முக்கியத் தகவல்களைக் களவாடியதாக சீனாவைச் சேர்ந்த மூன்று பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. பென்சில்வேனியா மாகாண நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டது என்று அமெரிக்க நீதித்துறை தெரிவித்தது. மூடிஸ் நிதி ஆய்வு நிறுவனத்தின் துணை நிறுவனமான மூடிஸ் அனலிடிக்ஸ், பொறியியல் நிறுவனங்களான சீமென்ஸ், டிரிம்பிள் ஆகியவற்றின் கணினி சேமிப்பகங்களை ஊடுருவி, தொழில்நுட்பம், நிதி செயல்பாடுகள் குறித்த விவரங்களைக் களவாடியதாக சீனாவைச் சேர்ந்த மூன்று நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சீனாவில் உள்ள குவாங்ஷி நகரில் அவர்களுக்கு சொந்தமாக ஒரு இணைய பாதுகாப்பு நிறுவனம் உள்ளது. அந்த நிறுவனத்தின் கணினிகள் வழியாக அமெரிக்காவில் செயல்பட்டு வரும் முன்னணி நிறுவனங்களின் கணினி சேமிப்பகங்கள் ஊடுருவப்பட்டன என்று குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஊடுருவல் 2011ம் ஆண்டு முதல் இவ்வாண்டு மே மாதம் வரை தொடர்ந்தது. இந்த ஊடுருவல் விவகாரம் அம்பலமானதும், இது தொடர்பாக அந்த நிறுவனங்கள் அமெரிக்க நீதித்துறையிடம் புகார் அளித்தன. பின்னர் நடைபெற்ற தீவிர விசாரணையில் சீனாவின் குவாங்ஜவில் உள்ள நிறுவனம் இதன் பின்னணியில் இருப்பது தெரியவந்தது. அதையடுத்து, அந்த சீன நிறுவனத்தைச் சேர்ந்த மூவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

## சீன இராணுவ ஜெனரல் தற்கொலை

ஊழல் வழக்கில் சிக்கிய சீன இராணுவ ஜெனரல் தற்கொலை செய்து கொண்டார். சீனாவில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை அதிபர் ஜி ஜின்பிங் மேற்

## பின்லாந்தின் நூற்றாண்டு

பின்லாந்து நாடு, 100 ஆண்டுகளுக்கு முன்னர் 1917ம் ஆண்டு டிசம்பர் 6ம் திகதி ரஷ்ய புரட்சியை தொடர்ந்து புதிய நாடாக உருவானது. அதன் நூற்றாண்டு விழா கடந்த வாரம் வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

## சுவிஸ் வங்கியில் இருந்து நைஜீரியப் பணம் மீண்டது

நைஜீரியா நாட்டில் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் மறைந்த சானி அபாக்கே கொள்ளையடித்த பணம் என கருதப்படுகிற 320 மில்லியன் டொலர் தொகையை அந்த நாட்டுக்கு திருப்பி தருவதாக சுவிட்சர்லாந்து அரசு அறிவித்துள்ளது. இந்த பணத்தை சுவிஸ் நீதிமன்றம் 2014ம் ஆண்டு முடக்கி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அண்டார்டிகாவில் ஒரு மரதன் ஓட்டம்

உயிரை உறையவைக்கும் அண்டார்டிகாவில் நடத்தப்பட்ட வருடாந்திர பனி மரதன் ஓட்டப் போட்டியில் பங்



கேற்றவர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முதலில் அவர்கள் வழக்கமாக சாப்பிடும் உணவுகளுக்கு தடை விதிக்கப்பட்டது. தொடர்ந்து பிரத்யேக உடை வழங்கப்பட்டு மைனஸ் 25 பாகை குளிரில் 21 கிலோ மீற்றர் தூர ஓட்டப் பந்தயம் கடந்த 24ம் திகதி தொடங்கி 27ம் திகதி முடிவடைந்தது. இந்த மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் டென்மார்க்கின் பிரான்க் ஜான்சனும், பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் கெல்லி மெக்லேவும் வெற்றி பெற்றனர்.

## ஒரு பாலின திருமண சட்டம் நிறைவேறியது

தேசிய அளவில் பல மாதங்களாக நடத்தப்பட்ட தீவிர விவாதங்களுக்கு பின்னர், ஒருபாலுறவுக்காரர்களின் திருமண சட்டத்தை அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் ஒருமனதாக நிறை



வேற்றியுள்ளது. மொத்த 150 நாடாளுமன்ற உறுப்பினர்களில் வெறுமனே 4 பேர் எதிராக வாக்களித்திருந்தனர். இந்த மசோதாவை நாடாளுமன்ற கீழவை ஏற்றுக்கொண்டவுடன் மகிழ்ச்சியும், கைத்தட்டல்களும், கட்டி தழுவுதலும் நிகழ்ந்துள்ளன. இதற்கு முன்னதாக, நாடாளுமன்ற மேலவை இந்த சட்டத்தை ஒருமனதாக ஏற்றிருக்கிறது. ஒருபாலுறவுக்கரர்களின் திருமணத்திற்கு ஆதரவாக பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள் ஆதரவளிப்பதை தேசிய மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் அறிய வந்த பின்னர் இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## ரஷ்ய அதிபர் தேர்தலில் மீண்டும் புட்டீன்

ரஷ்ய அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டீன் கூறியுள்ளார். விளாடிமிர் புட்டீன் 1999ம் ஆண்டு முதல் ரஷ்ய அதிபராக பதவி வகித்து வருகிறார். ரஷ்யாவில் 2018ம் ஆண்டு மார்ச் மாதம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் மொஸ்கோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட ரஷ்ய அதிபர் தொழிலாளர்கள் மத்தியில் பேசுகையில், எனது ஆட்சியை 2024 வரை நீட்டிக்க நான் வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள அதிபர் தேர்தலுக்கு வேட்பு மனுவை தாக்கல் செய்வேன். மார்ச் மாதம் நாட்டில் புதிய ஆறு வருட ஆட்சி நிலை நாட்டப்படும். இவ்வாறு தொழிலாளர்கள் மத்தியில் பேசினார். அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 80 சதவீத மக்கள் புட்டீனுக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறியிருந்தனர். விளாடிமிர் புட்டீன் ஏற்கெனவே 3 முறை அதிபராக பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படுகொலையாளிகளுக்கு வாழ்நாள் சிறை

அர்ஜெண்டினாவில் 1976 – 1983 வரையான காலகட்டத்தில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. அப்போது ஆட்கடத்தல், சித்ரவதை, படுகொலை போன்ற கொடிய குற்றச்செயல்கள் பல இடம்பெற்றன. இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் 29 பேருக்கு வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## ரஷ்ய நாடாளுமன்றத்திற்குள் அமெரிக்காவிற்கு தடை

நாடாளுமன்றத்திற்குள் நுழைய அமெரிக்க ஊடகவியலாளர்களுக்கு தடைவிதிக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் இதுகுறித்து கூறும்போது, அமெரிக்க செய்தியாளர்களுக்கு, நாடாளுமன்றத்திற்குள் நுழைய தடைவிதிப்பது குறித்த மசோதா, கீழ் சபையில் முழுமையான ஒப்புதல் பெறப்பட்டுவிட்டதாக தெரிவித்தார். மேலும் இதுகுறித்து ரஷ்யன் அதிகாரிகள் ரஷ்யன் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தபோது, அமெரிக்க ஊடகங்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாக கூறினர்.

## ஜேர்மனி தொடருந்து விபத்தில் பலர் காயம்

ஜேர்மனியில் கடந்த வாரம் ஏற்பட்ட தொடருந்து விபத்தில் 50 பேர் காயமடைந்துள்ளனர். ஜேர்மனியில் டஸ்செல்டார்ப் அருகே மீர்பஸ்க் என்ற



இடத்தில் பயணிகள் தொடருந்து ஒன்று சரக்கு தொடருந்தின் மீது மோதி விபத்திற்குள்ளானது. இந்த சம்பவத்தில் 50 பேர் காயமடைந்துள்ளனர் என தீயணைப்பு துறை மற்றும் காவல் துறை தகவல் தெரிவித்துள்ளது.



கொண்டு வருகிறார். அதில் இராணுவத்தில் நடைபெற்ற ஊழல் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. மத்திய இராணுவ ஆணையகத்தில் துணை தலைவர்களாக இருந்த குவோ பாக்சியாங், சூ காய்ஹோ ஆகியோர் மீது ஊழல் தொடர்பான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. இவர்களுடன் தொடர்பு வைத்திருந்த மத்திய இராணுவ ஆணையக உறுப்பினரும், இராணுவத்தின் ஜெனரலுமான ஷொங் யாங் மீதும் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

2016 ஒக்டோபர் முதல் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஷொங் யாங்குடன் சேர்த்து இராணுவ பொது ஊழியர்களின் தலைமை ஜெனரல் பாங் பெங்குயி மீதும் விசாரணை நடந்தது. இதையடுத்து மிகவும் உயர் பதவியில் இருந்த இவர்கள் இருவரையும் அதிபர் ஜி ஜின்பிங் வெளியேற்றினார். இவர்கள் இருவரும்தான் அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு அடுத்தபடியாக சீன இராணுவத்தில் உயர் பதவியில் இருந்தவர்கள். இந்தநிலையில் இராணுவ ஜெனரல் ஷொங் யாங் தனது வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். நவம்பர் 23ல் அவர் தற்கொலை செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க இராணுவ தளவாடங்கள் விற்பனை அதிகரிப்பு

### மத்திய மற்றும் மேற்கு ஆசிய நாடுகளே அதிக கொள்வனவு

2017ம் ஆண்டில் மட்டும் இதுவரை 38 ஆயிரம் கோடி டொலர் மதிப்புக்கு இராணுவ தளவாடங்களை விற்பனை செய்துள்ளதாக அமெரிக்கா பாதுகாப்புத் துறை தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்நாட்டு பாதுகாப்பு துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது: அமெரிக்காவின் இராணுவ தளவாட தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு உலக அளவில் எப்பொழுதுமே நல்ல வரவேற்பு உள்ளது. குறிப்பாக, வெளிநாட்டு இராணுவம் மூலமான ஆயுத விற்பனையில் விறுவிறுப்பு காணப்படுகிறது. இதற்கு, வாடிக்கையாளர்களுக்கு வெறும் தளவாடங்களை மட்டும் விற்பனை செய்யாமல், அதனை இயக்குவதற்கான பயிற்சி, பராமரிப்பு பணி உள்ளிட்ட சேவைகளை தொடர்ந்து அளித்து வருவதே முக்கிய காரணம்.

கடந்த 70 ஆண்டுகளாக அமெரிக்காவின் அரசியல் மற்றும் பாதுகாப்பில் ஆயுத விற்பனை என்பது முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. இந்த ஆண்டில் 38 ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான இராணுவ தளவாடங்கள் விற்பனை ஆகியுள்ளது. இதில், அதிகபட்சமாக மத்திய ஆசியா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளுக்கு 2,200 கோடி டொலர் மதிப்புக்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து, இந்தோ–பசிபிக் நாடுகள் (796 கோடி டொலர்), ஐரோப்பா (730 கோடி டொலர்), ஆபிரிக்கா (24.86 கோடி டொலர்) உள்ளிட்ட நாடுகளுக்கும் அமெரிக்காவின் ஆயுதங்கள் விற்பனையாகியது என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியாக விற்பனை செய்யப்பட்ட ஆயுதங்களும்– அதன் மதிப்பும் குறித்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

## கொரிய மாணவர்களுக்கு காதல் பாடம்!

சீனா பிறப்பு வீதத்தை எப்படிக் குறைக்கலாம் என்று நாள் தோறும் சிந்திக்கின்றது. ஒரு பிள்ளைத் திட்டத்தைக் கொண்டுவந்து அண்ணா, தம்பி, அக்கா, தங்கை, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி என்று உறவு முறையே இல்லாமல் ஒரு தலைமுறையை உருவாகிவிட்டது. தற்போது அத்திட்டத்தை தளத்தியுள்ளபோதும், விழுந்துள்ள இடைவெளியை நிவர்த்தி செய்யமுடியவில்லை.

ஆனால், சீனாவிற்கு அருகிலுள்ள ஜப்பானிலும், தென் கொரியாவிலும் பிறப்பு விகிதம் குறைவடைந்து செல்வதால் அந்நாடுகள் ஏது செய்வது என்று தெரியாமல் அச்சமுறுகின்றன. ஜப்பானில் திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது என்றால், பலரும் பொம்மைகளை வாங்கி அவற்றுடன் வாழ்க்கையை நகர்த்திக்கொண்டு செல்கின்றனர். குழந்தைகளுக்குத்தான் பொம்மை என்றால் இப்போது பெரியவர்களின் வாழ்க்கையும் பொம்மையுடனாக மாறிவிட்டது.

தென் கொரியாவில் பிறப்பு விகித நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டு செல்கின்றது. அத்துடன் திருமணம் செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையும் கடுமையாகச் சரிந்துள்ளது. 1970ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016ம் ஆண்டின் திருமண விகிதம் கடும் சரிவை சந்தித்துள்ளதாகவும், கடந்த ஆண்டு 1000 பொதுமக்களில் 5 பேர் மட்டுமே திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பிறப்பு விகிதத்தை ஊக்குவிக்கும் வகையில் தென் கொரிய அரசு 50 பில்லியன் ஈரோ தொகையை ஒதுக்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக இளைஞர்களை



திருமண பந்தத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு அங்குள்ள பல்கலைக்கழகங்கள் காதல், பாலியல் உறவு, உறவு முறை உள்ளிட்ட பிரிவுகளில் பாடதிட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. தென் கொரியாவில் பெரும்பாலான இளைஞர்கள் தற்போதைய பொருளாதார நிலையை கணக்கில் கொண்டு திருமணம் செய்து கொள்வதையும் காதலிப்பதையே விட்டு விலகி வருகின்றனர். இதனால் பிறப்பு விகிதம் கடும் சரிவை சந்தித்துள்ளது. இதை ஈடுகட்டும் பொருட்டு இளைஞர்களை காதலிக்க தூண்டும் வகையில் பாடத்திட்டங்களை உருவாக்க பல்கலைக்கழகங்களுக்கு அந்நாட்டு அரசு கோரிக்கை வைத்துள்ளது.

# போர்க் குற்றவாளி நீதிமன்றில் தற்கொலை

குரேஷிய நாட்டு போர்க் குற்றவாளியான முன்னாள் யுகோஸ்லாவியாவை சேர்ந்த ஸ்லோபோடோன் பிரல்ஜாக் (Slobodan Praljak – 72 வயது) என்பவர் கடந்த 29ம் திகதி நீதிமன்றத்திலேயே விசமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

1992 – 1995 ஆண்டுகளில் நடந்த பொஸ்னியா போரின்போது, பொஸ்னிய முஸ்லிம்களை வெளியேற்றுவது, நெறிமுறைகளை மீறி அவர்களைப்




படுகொலை செய்தது குறித்து பொஸ்னியா நாட்டின் இராணுவத் தளபதியான ஸ்லோபோதன் ப்ரால்ஜக் உள்ளிட்ட ஆறு பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கை நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றம் விசாரித்தது, விசாரணையின் முடிவில் இராணுவத் தளபதி ஸ்லோபோடோன் பிரல்ஜாக் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த ஆறு பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வந்தது. இந்த போர் நடைபெற்ற சமயத்தில் பொஸ்னிய இராணுவத்தின் தளபதியாக செயல்பட்டவர்கள் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக தீர்ப்பாயம் தீர்ப்பளித்ததோடு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த விசாரணை முடிவில் சர்வதேச நீதிமன்றம், குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும் 20 ஆண்டுகள் சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இதனால், அதிர்ச்சி அடைந்த ஸ்லோபோடோன் பிரல்ஜாக் அப்போது யாரும் எதிர்பாராதவிதமாக, ‘தான் ஒரு போர்க் குற்றவாளி அல்ல. இந்தத் தீர்ப்பை நான் எதிர்க்கிறேன்’ என்று கூறியவாறு ஸ்லோபோடோன் ஒரு சிறிய போத்தலில் கொண்டுவந்திருந்த விசத்தை திறந்து அருந்தினார். உடனடியாக நீதிமன்றத்தை ஒத்திவைத்த நீதிபதி, ப்ரால்ஜக்கை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி காவல்துறையினருக்கு வலியுறுத்தினார். அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு காவல் துறையினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனால் அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவரது கைக்கு எவ்வாறு விசம் வந்தது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாக ஹேக் நகரக் காவல்துறையினர் கூறியுள்ளனர்.

தற்கொலை செய்வதற்கு 3 மணி நேரத்திற்கு முன்பே அதே விடயம் அந்த முன்னாள் போர் தளபதியின் வழக்கறிஞருக்கு தெரியும் என்று கூறப்படுகிறது. ஆனால் அந்த வழக்கறிஞர் இதுகுறித்து யாரிடமும் கூறவில்லை. மேலும் அவர் விசத்தை கைகளிலே மறைத்து கொண்டு வந்திருக்கலாம் எனப்படுகிறது. அது கண்ணாடி போத்தல் என்பதால் மெட்டல் டிடெக்டர் காட்டிக் கொடுக்காமல் இருந்துள்ளது. இவை குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் அவரின் தற்கொலை காரணமாக 6 பேர் தேவையில்லாமல் மரணம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

அவர் அவசரமாக சிகிச்சைக்கு கொண்டுசென்ற மருத்துவமனையில் அதே சமயத்தில் அவசர சிகிச்சைக்காக இன்னும் ஆறு பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முக்கியமான குற்றவாளி என்பதால் மருத்துவர்கள் இவரை அதிகம் கவனித்து இருக்கின்றனர். இதன் காரணமாக அந்த மருத்துவமனையில் இருந்த மற்ற 6 நோயாளிகளும் மரணம் அடைந்துள்ளனர்.

பிரான்சில் உள்ள அனைத்துத் தமிழ்ச்சோலைப் பள்ளிகளும் இணைந்து வழங்கும்

# 19வது / 19ème அகவை முத்தமிழ் விழா
# Gala du Tamoulcholai 2017

காலம்: 16-12-2017 சனிக்கிழமை

நேரம்: 11:00 மணி

இடம்: LE MILLÉNAIRE

3 Place du 19 Mars 1962,
77176 Savigny-le-Temple

RER D Gare - Savigny-le-Temple
Direction: Melun Via Combs-La-Ville

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்
தமிழ்ச்சோலை-பிரான்சு
Tamoulcholai-France

பிரான்சு மண்ணில் வளரும் நம் சிறார்களின் முத்தமிழ் வெளிப்பாடுகளைக் கண்டு களித்திட அனைவரும் வருக!

தாய்நிலம் காணத் தலைமுறை நாம்
புலம்பெயர் மண்ணில் வளர்கின்றோம்
மண்தனை மறந்தோர் நெஞ்சங்களில்
மாண்பினைப் புகட்டும் தமிழ்ச்சோலை

நுழைவு: இலவசம் Entre Gratuite

அன்றைய நாள் தமிழ்ச்சோலைகளின் வளர்ச்சி நிதிக்கான சீட்டுக்கள் நல்வாய்ப்புப் பார்க்கப்படும்.

பரிசுப் பொருட்களை அன்பளிப்புச் செய்பவர்கள்

1ம் பரிசு: ORDINATEUR PORTABLE மடிக்கணினி — SWARNA MAHAL

2ம் பரிசு: NOTEBOOK வலையகம் — Boucherie GABARINA

3ம் பரிசு: TABLETTE 7" வரைபட்டிகை — BABA

மூன்று ஆறுதல் பரிசுகள் — SRI BHAGAVAN

உதவிகள் வழங்கிய வர்த்தக நிறுவனங்கள்


FRANPRIX BOBIGNY, HARRY, GOPAL & CO,
M.M.EXPRESS, ANNA MARCHÉ, BALAVINAYAGAR

"நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்"

"NOTRE LANGUE MATERNELLE EST LA RACINE DE NOTRE BIEN ÊTRE"

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் ASSOCIATION TAMOULCHOLAI - 165 BD de la Villette, 75010 PARIS
Tél: 09 84 06 38 83 | tamoulcholai@yahoo.fr | www.tamoulcholai.fr

# தமிழர்களைப் பீடிக்கும் மறதி...



**மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்று சங்கரியாரைப் புனிதராக்க முற்படும் அனைவருக்கும் பாலா அண்ணையின் இக்கருத்து சமர்ப்பணம்.**

அதனால் சட்டத்தரணி தொழிலைத் தன்னால் செய்ய முடியாது போனது குறித்தும் தன்னைச் சந்திப்போரிடம் சங்கரியார் பிதற்றிக் கொள்வதுண்டு. அறளை பெயர்ந்து போய் ஆள் பிதற்றுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள், '1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியதில் இருந்து 1983ஆம் ஆண்டு ஆறாம் திருத்தச் சட்டத்தை ஜெயவர்த்தன கொண்டு வரும் வரையான ஆறாண்டு காலப் பகுதியில் தமிழீழத்தை நிறுவுவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்று அவரிடம் கேட்டால் போதும். ஆள் ஆடிப் போய் விடுவாராம்.

ஆறாம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள், தங்களால் வாடகை கொடுத்து அங்குள்ள வீடுகளில் தங்கியிருப்பது கடினம் என்றும், தங்களுக்கு இலவசமாக தமிழக அரசு வீடுகளை வழங்கினால் சௌகரியமாக இருக்கும் என்றும் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தார்கள். எம்.ஜி.ஆர் அவர்களும் பெருந்தன்மையோடு 20.02.1984 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களான சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தர் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைவர்) ஆகியோருக்கு சென்னை நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி குடியிருப்பில் தலா இரண்டரை இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான சொகுசு வீடுகளை வழங்கினார்.

ஆனால் சங்கரியாருக்கு மட்டும் உடனடியாக வீடுகள் எவையும் கிடைக்கவில்லை. அதற்காக அவர் சற்றுக் காத்திருக்க நேர்ந்தது.

அப்பொழுது யேர்மனி செல்வதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்ட, அங்கு சென்று அங்குள்ள ஈழத் தமிழ் ஏதிலிகள் முகாமில் தனது உறவினர் ஒருவருடன் சிறிது காலம் சங்கரியார் தங்கினார். ஈழத் தமிழ் ஏதிலிகளுக்கென்று யேர்மனிய அரசாங்கம் வழங்கிய நிதியுதவியில் உல்லாசமாக நாட்களைக் கடத்திய சங்கரியார், பின்னர் இந்தியா திரும்பியதும் பத்திரிகைகளுக்கு செவ்வியொன்றை வழங்கினார். தான் இராசதந்திரப் பயணமாக யேர்மனி சென்றிருந்ததாகவும், அங்குள்ள தமிழர்களையும், யேர்மனிய அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்து அவர்களுடன் ஈழத்தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தி விட்டே தான் நாடு திரும்பியதாகவும் சங்கரியார் கூற, அதனை சில ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டன.

சில காலம் கழித்து இவ்விடயம் யேர்மனியில் சங்கரியார் உல்லாசமாக நாட்களைக் கழித்த ஏதிலிகள் முகாமில் தங்கியிருந்த ஈழத்தமிழர்களின் காதுக்குச் சென்ற பின்னர் தான் சங்கரியாரின் பித்தலாட்டம் அம்பலமானது.

இவ்வாறு பொய்யும், பித்தலாட்டமுமாகக் காலத்தைக் கழித்த சங்கரியார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னரும் கூட தன்னைத் திருத்திக் கொள்ளவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்ட ஒரேயொரு காரணத்திற்காக 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தனது சொத்துடமையாக்க முற்பட்டுக் குழப்பம் விளைவித்தவர் சங்கரியார். சமாதான காலத்திலும், நிழல் யுத்தம் நிகழ்ந்த பொழுதும், முழு அளவில் யுத்தம் வெடித்த பின்னரும், தமிழீழத் தேசியத் தலைவருக்கு அறிவுரை கூறும் சாக்கில் அவரை இழிவுபடுத்தும் வகையில் திறந்த மடல்களை எழுதிக் கொட்டிய வரும் சங்கரியார்தான்.

டில்லிக்குத் தந்தி எழுதி எழுதியே ஈழத்தமிழர்களை ஏமாற்றிய கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் கால்தடங்களைப் பின்பற்றித் திறந்த மடல்களை எழுதியதாலோ என்னவோ, 2006 கார்த்திகை மாதம் சங்கரியாருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உப நிறுவனமான யுனெஸ்கோ விருதொன்றை வழங்கியது. அது வெறும் விருதல்ல: விருதோடு ஒரு இலட்சம் டொலர்கள் ரொக்கப் பணமும் சங்கரியாருக்கு வழங்கப்பட்டது. அதை சங்கரியார் என்ன செய்தார் என்பது அவருக்கே வெட்ட வெளிச்சம்.

இப்படிப்பட்ட ஒருவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு எதிர்காலத்தில் எவ்வாறான பாதையில் பயணிக்கப் போகின்றது என்பதைப் புரிந்து கொள்வது கடினம் அல்ல.

27.11.2005 அன்று இலண்டன் அலெக்ஸ-ாண்ட்ரா மாளிகையில் நடைபெற்ற மாவீரர் நாளில் உரையாற்றும் பொழுது சங்கரியார் பற்றிப் பின்வருமாறு தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார்:

"நான் இந்த மண்டபத்திற்குள் வரும் பொழுது எனது நண்பர் ஒருவர் சொன்னார். ஆனந்தசங்கரி ஐயாவும் இந்தக் கூட்டத்துக்கை வந்திருக்கிறார் என்று. அவர் வந்திருக்கிறது நல்லது. ஆனால் அவரை எங்களுக்கு ஒருக்கால் அறிமுகப் படுத்தி விட்டீங்கள் என்றால் யாராவது... ஏனென்றால் ஐயாவை ஒருக்கால் கட்டிப் பிடிச்சுக் கொஞ்ச வேண்டும் என்று ஆசையாய் இருக்கு. ஆனந்தசங்கரி ஐயா கொழும்பிலை சென்னாராம். நான் இந்த உலகம் எல்லாம் சுத்திக் கொண்டு திரியிறன். என்ரை ஊர். சொந்த ஊர் கிளிநொச்சிக்குப் போக முடியவில்லை என்று. அவர் ஏன் கிளிநொச்சிக்குப் போக அந்தரப்படுகிறார் என்று எங்களுக்குத் தெரியும். கிளிநொச்சியிலை புளியம்பொக்கணை என்றொரு கிராமம் இருக்கு. அங்கே இவருக்குத் தெரிஞ்ச இரண்டு கிழவியள் இருக்கினம். இவர் அங்கு போய் உடும்பு இறைச்சி தின்கிறவராம். அதுக்காகத் தான் அங்கு போக அந்தரப்படுகிறார் போல் இருக்கு. நாங்கள் அவருக்குச் சொல்ல விரும்புகிறம். ஐயா நீங்கள் கிளிநொச்சிக்கு எப்பவும் வரலாம். அங்கே ஒரு பைவ் ஸ்ரார் ஹொட்டேல் ஒன்று பொட்டம்மான் கட்டி வைத்திருக்கிறார். அங்கே வந்தால் நல்ல சாப்பாடு கிடைக்கும்..."

மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்று சங்கரியாரைப் புனிதராக்க முற்படும் அனைவருக்கும் பாலா அண்ணையின் இக்கருத்து சமர்ப்பணம்.

## இந்தியாவின் சுயரூபத்தைப்...

நான் பயணித்த வீதிகள் தோறும் குர்தி சுதந்திரப் போராட்டத்தில் மடிந்த மாவீரர்களுக்கான நினைவுச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதிலும் குறிப்பாக தமிழீழத்தில் வீதிகள் தோறும் ஏ.கே-47 ரக துப்பாக்கிகள் நிலத்தில் தலைகீழாக நாட்டப்பட்டு, மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் சுவரோவியங்கள் தீட்டப்பட்டிருந்தது போன்று குர்திஸ்தானில் நான் பயணித்த வீதிகளிலும் சுவரோவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இந்த ஒற்றுமை பற்றி நான் ஆச்சரியப்பட்டாலும், இது பற்றி நான் எவரிடமும் பேசவில்லை. ஆனால் இம்முறை குர்திஸ்தானைப் பற்றிய எனது அபிப்பிராயத்தை நெரிமான் கேட்டதும் இவைதான் என் நினைவில் வந்தன.

நான் கூறினேன்: 'குர்திஸ்தானின் வீதிகள் ஊடாகப் பயணிப்பது தமிழீழத்தில் பயணித்த நினைவுகளை இரைமீட்ட வைக்கின்றது.'

அப்பொழுது நெரிமான் என்னிடம் கேட்டார்: 'உங்கள் நாட்டில் உங்கள் தமிழ்ப் புலிகளுக்குக் கல்லறைகள், நினைவுத் தூபிகள் உள்ளனவா?'

'முன்னர் இருந்தன. ஆனால் அவற்றை எல்லாம் சிறீலங்கா படையினர் இடித்துக் கல்லறைகளை உழுது, துவம்சம் செய்து விட்டார்கள்' என்றேன்.

அதிர்ச்சியுடன் என்னை நெரிமான் பார்த்தார். பின்னர் கூறினார்: 'இப்படித்தான் துருக்கியில் இருந்து பிரிந்து சென்று வட குர்திஸ்தான் நாட்டை உருவாக்குவதற்காகப் போராடி வரும் ஒசலானோவின் தலைமையிலான பி.கே.கே சுதந்திரப் போராளிகளின் கல்லறைகளையும் துருக்கியப் படையினர் இடித்து, உழுது துவம்சம் செய்தார்கள்.'

சுதந்திரத்திற்காகப் போராடும் மக்கள் மீது ஆக்கிரமிப்பாளர்களும், இனவழிப்பாளர்களும் ஒரே மாதிரியான வன்முறையையே பிரயோகிப்பார்கள் என்பது போராடும் ஒவ்வொரு இனங்களும் அறிந்த ஒன்றுதான். ஆனாலும் உயிரோடு வாழ்பவர்களை மட்டுமன்றி, தமது மண்ணின் கீழ் மீளாத்துயில் கொள்பவர்களின் கல்லறைகளையும் ஒரே பாணியில் ஆக்கிரமிப்பாளர்களும், இனவழிப்பாளர்களும் துவம்சம் செய்வதை எண்ணிப் பார்த்த பொழுது அதை ஜீரணிப்பது மிகக் கடினமாக இருந்தது.

**குர்திஸ்தான் பயணம் தொடரும்...**

## ஆத்துல போட்டாலும்....

அவற்றை மாணவன் உள்வாங்கும்போது அத் தகவல்களைப் பற்றி நன்கு அறிந்தபின்னரே நினைவில் கொள்ளவேண்டும்.

தகவல்களின் தன்மைகளையும் நோக்கங்களையும் அறியாமல் வெறுமனே நினைவில் கொள்ளும்போது தகவல் குறுக்கீடு உண்டாகித் தெளிவின்மை பிறக்கும். அறிவுத் தெளிவின்மையே பல தவறான செயல்பாடுகளுக்கான மூலமாகும். இதனால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவது பாதிக்கப்படுவதுடன் வாழ்வதே கடினமாகவும் தோன்றும். தெளிவின்மை எல்லை மீறும்போது பைத்தியமாகிவிடுகின்ற கேடும் இருக்கிறது.

மனித வாழ்க்கையில் அறிவின் பயன்பாடு எவ்வளவு இன்றியமையாதது என்று நாம் நன்கு அறிவோம். ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுவதே அறிவுதானே. இப்படிப்பட்ட அறிவு தெளிவாக இல்லாவிட்டால் விளைவு மோசமாகிவிடும் அல்லவா?. அதனால் தான் கருத்துக்களை நினைவில் கொள்ளும்போது தெளிவாக அறிந்தபின்னரே நினைவில்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றனர். இதுவே இப்பழமொழியின் உண்மையான விளக்கமாகும்.

## உலகின் உயர்ந்த...

கோடை காலத்தில் அமெரிக்காவில் உள்ள மற்ற எல்லா ஏரிகளையும் விட குளிர்ந்தே இருக்கிறது. அதற்கு காரணம், இது கடல் மட்டத்தில் இருந்து வெகு உயரத்தில் அமைந்திருப்பதே. இவ்வளவு உயரத்தில் அமைந்துள்ள இந்த ஏரியின் அருகே மரங்கள் அதிக அளவில் வளர்வதில்லை. இதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. இதுமட்டுமில்லாமல் கரையோரங்களில் மர்மமான அழிவுச் சின்னங்கள் சில காணப்படுகின்றன. இதனைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் தற்போது வரை ஆராய்ந்து வருகிறார்கள்.

## நீரிழிவு நோயை விரட்டும்....

துருக்கியில் வறுத்த வெண்டைக்காயின் விதைகள் நீரிழிவு நோய்க்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து ஆய்வு மேற்கொண்டதில், இம்முறையினால் இரத்தத்தில் உள்ள அதிகப்படியான குளுக்கோசின் அளவு குறைந்து சீராக பராமரிக்கப்பட்டு வந்தது நிரூபிக்கப்பட்டது.

உடலில் அதிகப்படியான கொழுப்பு இருந்தால், உணவில் வெண்டைக்காயை அதிகம் சேர்த்து வருவதோடு, வெண்டைக்காய் நீரை குடிப்பதன் மூலம் குறைக்கலாம். நீங்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவோராயின் உங்களது நோயெதிர்ப்பு சக்தியை வெண்டைக்காய் தண்ணீர் வலிமையாக்கும். நீரிழிவு நோயுடன், சிறுநீரக நோய்களின் தாக்கத்தில் இருந்தும் விடுபட நினைத்தால், வெண்டைக்காய் தண்ணீர் அதற்கு நல்ல உத்திரவாதம் அளிக்கும். முக்கியமாக சுவாச பிரச்சனை இருப்பவர்களுக்கு, வெண்டைக்காய் நீர் மிகவும் நல்லது. இதனை பருகி வந்தால், ஆஸ்துமாவில் இருந்து நல்ல விடுதலை கிடைக்கும்.

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 12 . 1929

மறைவு 19 . 12 . 2014

திதி:16.12.2017


## அமரர் செல்லர் கந்தையா

மூச்சடங்கிப் போன செய்தி காதில்
மூர்ச்சையாக இன்னும் எதிரொலிக்க
மூர்க்கமான எமன் விதிசெயலென
மூவிரு முகத்தானை வேண்டி நின்று
மூடிய விழிகள் திறப்பதற்கு முன்னர்
மூன்று ஆண்டுகள் விரைந்தே ஓடின!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

இல.07. சென்மேரிஸ்
2 ஆம் ஒழுங்கை.
கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.

துயருடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.03.1939

மறைவு 26.11.2017

## திரு சுப்பிரமணியம் கோபாலபிள்ளை

*(பிரபல வர்த்தகர்- Bombay Stores- Colombo> Maniam Stores- Pungudutivu> Gopal & Co- Paris> Call City- Paris> The Pizza- Jaffna>*
*தலைவர்- புங்குடுதீவு மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான சபை)*

யாழ். புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பிரான்ஸ் Paris, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கோபாலபிள்ளை அவர்கள் 26-11-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மணியம் ஸ்டோர்ஸ்) மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், சற்குணம் அவர்களின் அன்புக் கணவரும், காண்டீபன்(பரிஸ்), மணிமாறன்(பரிஸ்), வளர்மதி(கனடா), மணிவண்ணன்(ரவி- பரிஸ்), மதிவாணன்(கோபு- பரிஸ்), நீலவண்ணன்(பரிஸ்), முரளீதரன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிச்சந்திரன்(முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), பவானிதேவி, மலர்விழி, மாலிகா, பத்மகௌரி, சுபர்ணா, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, தியாகராஜா, கவிஞர் வில்வரட்னம் மற்றும் கருணாகடாச்சம், கருணாகரன், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைசாமி, தர்மலிங்கம், ஞானமூர்த்தி, கார்த்திகேசு, நாகேசு, செல்லம்மா, பராசக்தி, பசுபதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை(ஆசிரியர்), சிவபாக்கியம், கிருஷ்ணபிள்ளை மற்றும் பராசக்தி, சாரதாம்பாள், இராஜேஸ்வரி, மணிமேகலை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவின், கவிசன், அவனிக்கா, கிஷோர், அஞ்சுகி, அஷ்மிதா, ஜதுசன், ஆழினி, ஆதுளன், ஆரபி, ஆரணன், ஆரூரன், ஆயினி, அஸ்விதா, அபீஸ்மன், நிதுஷன், ஆதுரி, தூரிகன், அபிசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை 12.12.2017, 02:00 பி.ப - 05:30 பி.ப Chambre Funérarium des Batignolles, 1 Boulevard du Général Leclerc, 92110 Clichy, France(Métro : Porte de Clichy ou Porte de Saint-Ouen, RER : Ligne C - Porte de Clichy, Bus : 66 - Arrêt Floréal, P.C. -Arrêt Porte Pouchet) என்னும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் அதே இடத்தில் புதன்கிழமை 13.12.2017, 09:30 மு.ப - 11:30 மு.ப இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் 12:30 பி.ப 02:15 பி.ப Crematorium of Père Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France(Metro. Gambetta) என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ரவிச்சந்திரன்(வளர் கனடா): 0016476064252 / 0016476068326
காண்டீபன் (பிரான்ஸ்): 0033618175699
மணிமாறன்(மணி பிரான்ஸ்): 0033679847963
மணிவண்ணன்(ரவி பிரான்ஸ்): 0033751081483
மதிவாணன்(கோபு பிரான்ஸ்): 0033662790666
நீலவண்ணன் (பிரான்ஸ்): 0033695497776
முரளீதரன் (இலங்கை): 0094772017824

தகவல்
குடும்பத்தினர்

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30



Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65



பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.



செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
அபி சலூன்
தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34



AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை
உங்களிற்காக மிகவும் மலிவு விலையில்
தரமான இறைச்சி வகைகள்
ஆட்டிறைச்சி,
மாட்டிறைச்சி,
உயிர்க்கோழி,
கோழிக்கால்,
பங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro
93140 Bondy
HALAL
Tél : 07 51 08 14 83
07 51 27 72 38




Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும் உங்கள் வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
01 40 35 14 77
190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord



சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com



Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23



ASA FOOD
உங்கள் சகலவிதமான கொண்டாட்டங்களுக்கு
எம்மிடம் இடியப்பம், சம்பல், சொதி என்பனவற்றை
முன் அறிவிப்புடன் மிகவும் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு : உதயன்
06 95 96 60 64
BUS 346 620
Docteur Calmette





# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

VISA Aurore

3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

Mo: La Chapelle / Gare du Nord

# Professeur de Soutien Scolaire

**Maths et Sciences Physiques (CP à la Terminale)**
**Français, His-Géo, Science (CP à CM2)**

**Cours au domicile de l'élève !**

Déplacements possibles dans le département 95 autour de la ville de Saint Gratien mais également dans les départements (75, 92, 93). Tout dépend des distances, du temps de parcours, etc. Il faut voir avec le professeur pour les cas particuliers.

**Pour plus d'informations, consulter le site internet !**



பிரெஞ்சு மொழியில் CP-CM2 வரை எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும். Collége – Lycée வகுப்புக்களுக்கு Maths – Sciences - Physiques பாடங்கள் அவரவர் தராதரங்களுக்கு ஏற்ற வகையில் கற்றுக்கொடுக்கப்படும். உங்கள் வீடுகளுக்கும் குறிப்பிட்ட தூரத்திற்கு வந்து பாடங்கள் எடுக்கலாம். Saint Gratien அதைச் சுற்றியுள்ள ஊர்களுக்கு (75, 92, 93) வந்து வகுப்புகள் எடுக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு: இணையத்திலும் தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளவும். 12 ஆண்டுகள் அனுபவம் உடையவர்.

http://soutienscolaire-m-sp.sitego.fr
Email : chinniah_anuraj@hotmail.fr

**Port : 06.23.69.21 58**

பரிஸ் லா சப்பலில்

# AMBAAL STORE



பல் பொருள் அங்காடி

Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

# VICHNESH SHOP

அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



# COIFFURE VITHUSA

TÉL: 06 52 44 89 27

40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

# ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்




- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்

14 Rue Charles V,
75004 Paris.

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

Tél.: 01 60 07 34 29

சுதா / விமல் : 06 34 18 80 04